பக்கங்கள் 8

# ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 21 | தை 22 | ரபி-அவ் 17 | இதழ் 358

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 5-2-80

RECEIVED 1980 PERIODICALS DIVISION LIBRARY

சட்டசபைக் கூட்டத்தில்

## கூச்சல்; குழப்பம்

(சென்னை)

நேற்று நடைபெற்ற தமிழ் நாடு சட்டசபைக் கூட்டத்தில் என்றுமே இல்லாதவகையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

முஸ்லிம்லீக் உறுப்பினர் ஒருவருக்கும் அமைச்சர் ஒருவருக்குமிடையே நடைபெற்ற காரசாரமான விவாதத்தைத் தொடர்ந்து சபைக் கூட்டத்தில் பெரும் கூச்சலும், குழப்பமும் உண்டானது. இறுதியில் சபாநாயகர் பெரும் சிரமப்பட்டு இச்' சண்டையை' முடித்து வைத்தார்.

★ போதைப்பொருள் கடத்துவோரை

# உடன் நாடுகடத்த

# சுங்கப் பகுதி நடவடிக்கை!

(கொழும்பு)

**போதைப்பொருட்களை சட்டவிரோதமாக இங்குகடத்திவருவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள சுங்கப்பகுதி முன்வந்திருக்கிறது.**

குறிப்பிட்ட ஒரு போதைப் பொருளை இந்தியா, பாகிஸ்தான் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து இங்கு கடத்திவர முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதைத் தொடர்ந்தே சுங்கப்பகுதியினர் தங்களது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் காலம் இப்பொழுது ஆரம்பித்துவிட்டதால் பிரயாணிகள் போர்வையில் சர்வதேச கடந்தல்காரர்கள் இலங்கைக்குள் நுழையலாம் என்று சுங்கப்பகுதியினர் கருதுகின்றனர். போதை வஸ்துக்களை சட்டவிரோதமாக கடத்திவருவோருக்கு கடுமையான அபராதம் விதிக்கப்படுவதுடன் அவர்களை உடன் நாடு கடத்தவும் சுங்கப்பகுதிநடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் இருந்து மத்திய கிழக்குக்கு பெருமளவு வெள்ளி கடத்தப்படுவதாகவும் சுங்கப்பகுதியினர் கண்டுபிடித்துள்ளனர்.

மாத்தறையில் நடைபெற்ற

# வண்ணமிகு தேசியதினவிழா

(மாத்தறையிலிருந்து எஸ். மகாலிங்கசிவம்)

**இலங்கையின் 32வது சுதந்திரதினம் நேற்று இங்கு மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. சுதந்திரதினத்தையொட்டிய பல்வேறு நிகழ்ச்சிகளையும், மாலையில் நடைபெற்ற வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளையும் கண்டுகளிக்க லட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்தது ஒரு கண்கொள்ளாக்காட்சியாக அமைந்திருந்தது.**

மாத்தறை நகர் முழுவதுமே தேசியகொடிகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது.

நேற்றுக்காலை ஆறுமணியளவில் இங்குள்ள இந்துக் கோவில்களிலும், பௌத்த ஆலயங்களிலும், கிறிஸ்தவ தோவாலயங்களிலும், பள்ளிவாசல்களிலும் நடைபெற்ற மதச் சடங்குகளுடன் சுதந்திர தினவிழா சம்பந்தமான உத்தியோக பூர்வமான நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

தேசியதினவிழா நிகழ்ச்சிகளுக்கு வருகை தந்துள்ள ஜனாதிபதியையும் பாரியாரையும். பிரதமரும் பாரியாரும் காலை 8-30-க்கு வரவேற்று, விசேடமாக அமைக்கப்பட்ட மேடைக்கு அழைத்துச்சென்றபோது ஜனாதிபதிக்கு மரியாதைசெலுத்துமுகமாக 21 பீரங்கிவேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து தேசியகீதம் இசைக்கப்பட்டது.

இதற்குமுன்னர் ஆயுதப் படையினரதும் பாடசாலைப் பிள்ளைகளினதும் அணிவகுப்பு நடைபெற்றது.

விமான சாகச காட்சிகள் அற்புதமாக அமைந்திருந்தது மாலையில் நடைபெற்ற வண்ணமிகு கலைவிழாவிலும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் பாரியாரும் கலந்துகொண்டனர்.

நேற்றைய தேசியதினவிழாவில் அமைச்சர்களும் பல வெளிநாட்டு ராஜதந்திரிகளும் அவதானிகளும் கலந்துகொண்டனர். நீதியமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், பிராந்தியஅபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை ஆகியோரும் வந்திருந்தனர். சுகயீனம்காரணமாக அமைச்சர் திரு. தொண்டமான் சமுகமளிக்கவில்லை.

### நிருபர்கள் ஆத்திரம்

பத்திரிகைநிருபர்களுக்கு தனியாக ஒரு இடம் ஒதுக்கப் படாததால் வெளிநாட்டு நிருபர்களுடன் உள்நாட்டு நிருபர்கள் பலரும் ஆத்திரமடைந்திருந்ததை அவதானிக்கமுடிந்தது. பத்திரிகை நிருபர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் பொதுமக்களும் தாராளமாகபுளங்கியதே இதற்குக் காரணம். [ம]

தேசிய தினத்தையொட்டி

# 56 கைதிகளுக்கு விடுதலை

## விளக்கமறியல் கைதிகளை உறவினர் பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

சிறுகுற்றங்கள் சம்பந்தமாக சிறைத்தண்டனை அனுபவித்துவந்த 56 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

32வது சுதந்திர தினத்தைக் குறிக்கும் முகமாகவே 56 கைதிகளும் விடுதலைசெய்யப்பட்டனர்.

சிறுகுற்றங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலும், கோப்பாய் திறந்த வெளிச் சிறைச் சாலையிலும் தண்டனை அனுபவித்துவரும் சுமார் 300 கைதிகளில் 56 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட 56 கைதிகளில் வடபகுதியைச் சேர்ந்த 4 தமிழரும் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 52 சிங்கள, முஸ்லீம்களும் அடங்குவர்.

யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் திரு. தர்மரத்தினம் விடுதலை செய்யப்பட்ட கைதிகளை அழைத்து இனிமேலும் இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடாது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்காக ஏதாவது தொழில் செய்யவேண்டும் என்று புத்திமதிகூறி வழியனுப்பிவைத்தார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்களெனச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சுமார் 20 இளைஞர்களையும் சுதந்திரதினத்தை முன்னிட்டு அவர்களது உறவினர்கள் பார்வையிடுவதற்கும், உணவுகளை வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

சிறைச்சாலையிலும் சுதந்திர

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமண அழைப்பு

மணமகன்: மாவை சோமசுந்தரம் சேனுதிராசா
(மாவை சேனுதிராசா)

மணமகள்: செல்வி பவானி சதாசிவம்

இடம்: மணமகள் இல்லம், மாவிட்டபுரம்.

காலம்: தைத்திங்கள் 23-ம் நாள் (6-02-1980)
புதன்கிழமை மாலை 4-00 மணி.

தலைமை: தமிழர்தலைவர் அ.அமிர்தலிங்கம்அவர்கள்
"தமிழ்மரபுவழி முறையில் திருமணம் நடைபெறும்"

அனைவரையும் மணவிழாவிற் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துமாறு அழைக்கின்றோம்.

இங்ஙனம்

திரு. திருமதி சதாசிவம்
(மணமகளின் பெற்றோர்)
மாவிட்டபுரம்.

திருமதி தையல்நாயகி சோமசுந்தரம்
(மணமகனின் தாயார்)
மாவிட்டபுரம்.

4880

## யாழ். நகரில் நடைபெற்ற சுதந்திரதின வைபவம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் தேசியதினம் நேற்று யாழ்ப்பாணத்தில் மத அனுஷ்டானங்கள், தேசியக் கொடி ஏற்றல், ஏழைச் சிறுர்களுக்கு இலவச உணவு வழங்கல், மரம் நாட்டு விழாக்கள், போன்ற வைபவங்களுடன் அமைதியாகக்கொண்டாடப்பட்டது.

நேற்றுக்காலை வண்ணை வரதராஜப் பெருமாள் கோவிலில் நடைபெற்ற விசேட பூசையில் யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி கலந்து கொண்டார். இந்த விசேட அபிஷேகத்தை ஐ. தே. கட்சியின் கட்டுப்பாட்டிலிருக்கும் தொழிற்சங்கக்கூட்டணி நடத்தியது.

இதனைத் தொடர்ந்து யாழ். செயலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் தேசியக் கொடியை யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி ஏற்றிவைத்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

## அனுமதிப் பத்திரமின்றி மரங்கள் கொண்டுசென்றனராம் எதிரிகள் விடுதலை

(புத்தளம்)

அனுமதிப்பத்திரமின்றி 3,100 ரூபா பெறுமதியான மரங்களை கொண்டு சென்றதாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் 3 எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு புத்தளம் நீதிமன்றத்தில் நீதவான் திரு. சி. கடவத்த ஆராய்ச்சி முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் புத்தளம்-அநுராதபுரம் வீதியில் 79 மே 4ம் தேதி 3,100 ரூபா பெறும

றதாக ஏ. முருகன் எஸ். புஸ்பராசா, ரி. யோகேஸ்வரன் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பல

(8-ம் பக்கம் பார்க்க)

## MEDICAL OFFICER

WANTED MEDICAL OFFICER FOR IMMEDIATE APPOINTMENT. TERMS NEGOTIABLE. APPLY BEFORE 15th FEBRUARY, 1980.

Secretary,
JAFFNA PRIVATE HOSPITALS,
395, Navalar ROAD,
JAFFNA.

4886

## TRAINEE NURSES

WANTED TRAINEE NURSES G. C. E. (O/L) WITH ENGLISH OR (A/L) TWO PASSES. APPLY BEFORE 15th FEBRUARY, 1980.

Secretary,
JAFFNA PRIVATE HOSPITALS,
395, NAVALAR ROAD,
JAFFNA.

4886

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

எதிர்வரும் 6-2-80ல் நடைபெறவிருக்கும் திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகத்தன்று அங்கு யாழ். மில்க்வைற் ஸ்தாபனத்தாரின் மலிவு விற்பனை இடம்பெறும். அத்துடன் சிவன் பார்வதி படமும், ஒருமுகக் கலண்டர், நேரசூசி ஆகியன இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்பவர்கள் அங்கு கொடுத்து சிறந்த பரிசுப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற் தொழிலகம், த.பெ. இல. 77, யாழ்ப்பாணம். 4859

கோண்டாவில் கிழக்குச் சந்திக்கருகாமையில் இருபாலை வீதியில், வீடுகட்டுவதற்குச் சிறந்த பண்படுத்தப்பட்ட தோட்டம் செய்யும் கிணறு மோட்டார்ப் பங்குள்ள 3பரப்பு 3 குளி சதுரமான காணி, விற்பனைக்குண்டு. கோண்டாவில் கிழக்கு, ஆசிரியர் ப. சிவசுப்பிரமணியத்துடன் தொடர்பு கொள்ளவும். 4874

## தேவை

அச்சுவேலி தொழில் பேட்டையில் மல்லிகை மற்றும் வாசனைத் திரவிய தொழிற்சாலை நிறுவுவதற்கு சிறிய முதலீட்டு ஆதரவாளர்கள் தேவை. தொடர்பு கொள்க. ரி. எம். சேவைகள். (Trade and Management Services) 72, காரைநகர் வீதி, யாழ்ப்பாணம். 4876

கச்சான் கொம்பனிக்கு நல்ல அனுபவமுள்ள பெண்கள் தேவை. விபரங்களுக்கு:- 78/10, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். (பாரத் ஸ்ருடியோ ஒழுங்கை). 4873

## வாடகைக்கு

நவீன வசதிகளுடன் பெரிய புதிய பகுதி வீடு. 19, கடைச்சாமி வீதி, நீராவியடி. 4877

## "சத்திர சிகிச்சை நிலையம் அவசியம்"

(உடுப்பிட்டி)

"தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டுறவுத்துறையில் முன்னோடியாக விளங்கும் இலங்கை, இத்துறையில் மேன்மேலும் தொடர்ந்து முன்னேறி பொதுமக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும்"

இவ்வாறு வடமராட்சி கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், சங்கத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

"இவ்வைத்தியசாலை பல துறைகளிலும் இன்று முன்னேறி வருவது மகிழ்ச்சிக்குரியது. இருந்தபோதிலும் இங்கு சத்திர சிகிச்சை நிலையமும், அதற்கு வேண்டிய உபகரணங்களும் இல்லாத காரணத்தால் வடமராட்சிப் பகுதியில் உள்ளவர்கள் பிற இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. சத்திரசிகிச்சை நிபுணர்கள் எமது வைத்தியசாலையில் இருந்தும் இக்குறைபாடு தொடர்ந்து நீடிக்க விடக்கூடாது, இதற்கு நாம் கூடுதலான நிதிஉதவி மூலமும், பங்குப்பணத்தின் மூலமும் இரண்டு லட்சம் ரூபாவைத் திரட்டி இந்நிலையத்தை நிறுவ வேண்டும்" என்றார். (அ)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

(புலோலி)

பருத்தித்துறை அம்பன் கமநலச்சேவைநிலையத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. வி. இராசையா, பெரும்பாக உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்றுச் சாம்பல்தீவு கமநலச் சேவை நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். உடுப்பிட்டி, புலோலி கமநலச் சேவை நிலையத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. எஸ். கந்தசாமியும் பெரும்பாக உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்று அலம்பல் கமநலச்சேவை நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

......

## முதலாளி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சீனம் செய்தது. கடந்த தேர்தலில், மக்களே அதனை தூக்கி எறிந்துவிட்டார்கள். இதனை இன்றுள்ள அரசு உணர்ந்து கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் உரிமை பெற வேண்டும். தொழிலாளரும் உரிமைபெறவேண்டும். இவை இரண்டும் இணைந்துசெயல்பட வேண்டும். கடந்த காலத்தில் இடதுசாரித் தலைவர்கள், தொழிலாளர்கள் பற்றித்தான் அக்கறை கொண்டிருந்தனர். தமிழினம் பற்றிச்சிந்தித்ததாகத் தெரியவில்லை. இன்று அந்த நிலை மாறியுள்ளது.

இரத்தப்புரட்சி தேவையில்லை சிந்தனைப் புரட்சிதான் அவசியம் என இங்கு ஒருவர் கூறினார். யாழ்ப்பாணத்தில் இரத்தம் சிந்தியது யார்? கொம்பெனித்தெருவில் இரத்தம் சிந்தியது யார். மறியல் இயக்கத்தில் குண்டர்களினால் தாக்கப்பட்டு இரத்தம் சிந்தியது யார்? மக்கள், இளைஞர், தொழிலாளர் இரத்தம் சிந்தும்போது மற்றவர்கள் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.

அரசின் நடவடிக்கைகளை முறியடிக்க வடபகுதி மக்கள் ஒன்றுசேர்ந்து போராடவேண்டும். அரசுடன் ஒவ்வொருவரும் தனித்தனியாக சென்று பிரச்னைபற்றிப் பேசமுடியாது. தொழிலாளர், விவசாயிகள் தமிழ் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து போராட வேண்டும்.

தென்பகுதித் தொழிலாளர் மக்களை ஒன்று திரட்டி, போராட்டத்திற்கு தயார் செய்து வருகின்றனர். அதே போன்று வடபகுதித் தொழிலாளரும் தமிழ் மக்களைப் போராட்டத்திற்குத் தயார் படுத்த வேண்டும்.

சமசமாஜக் கட்சியினர் அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என சுதந்திரக்கட்சி, புதிய சமசமாஜக் கட்சி, மார்க்சிய கட்சி மக்கள் ஐக்கியமுன்னணி ஆகிய கட்சிகளுக்கு அறிவித்திருந்தனர்.

இதில் தமிழர் விடுதலை கூட்டணியும் சேர்க்கப்படவேண்டுமென்றும் மற்றும் சில கட்சிகளும் இணைக்கப்படவேண்டுமென்றும் ன் வற்புறுத்தியுள்ளேன்.

மேதினத்தில் போராட்டத்தை ஆரம்பிக்கலாம் என சமசமாஜக் கட்சியினர் கூறினார்கள். போராட்டம் தொடங்கிவிட்டதென்றும், அதனை வழிநடத்திச் செல்ல வேண்டும் என்றும் நான் கூறியுள்ளேன். தமிழ் மக்கள் தேசிய போராட்டம், மாணவர் போராட்டம், தொழிலாளர் போராட்டம் ஆரம்பித்துவிட்டது. அதனை மேலும் கொண்டு செல்ல வேண்டும்.

"இடதுசாரிகளின் பலத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சி அமைப்பதை தாம் அனுமதிக்கமுடியாது. ஆனால் இந்த அரசுக்கு ...ரான போராட்டத்தில், சுதந்திரக்கட்சியையும், கூட்டணியையும் சேர்த்துக் கொண்டுசெல்ல வேண்டும்.

(கொ-இ)

# "நஸீரின் சாதனையால் தமிழ் மக்களுக்குப்பெருமை"

**-- யோகேஸ்**

(யாழ்ப்பாணம்)

"முஸ்லிம் வட்டாரத்தில் பிரசவ விடுதியொன்றை அமைத்துக் தருவதற்கான ஆரம்பநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன."

இவ்வாறு 270 மைல் தூரத்தை 39 மணித்தியாலயங்கள் வலம்புரிபாணியில் இடைவிடாது சைக்கிளோடி சாதனை யொன்றை நிலைநாட்டிய ஜனாப் பரீத் நஸீருக்கு யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் அளித்த பொதுவரவேற்பில் கலந்து கொண்டு உரையாற்றிய மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் குறிப்பிட்டார்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் சட்டத்தரணி ஜனாப் ஆர். இமாம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. விசுவநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் ஜனாப் பரீத் நஸீர் தான்கொண்ட இலட்சியத்தில் அசையாத நம்பிக்கை வைத்து தமது சாதனைகளை நிலைநாட்டியதனை நாம் அனைவரும் பாராட்ட வேண்டும் என்றார்.

சட்டத்தரணி ஆர். இமாம் பேசுகையில் எமது வீரர் நஸீருக்கு யாழ். மாநகரசபை எந்த ஒரு வீரருக்கும் வழங்காத கௌரவத்தை வழங்கியுள்ளது என்றார்.

யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் உரையாற்றுகையில் தமிழ்பேசும் மகனை நஸீரது சாதனை தமிழ் மக்களின் பெருமையை உலகமெங்கும் பறை சாற்றும் என்பதில் ஐயமில்லை அவரால் தமிழ்இனம் பெருமை அடைகிறது. நஸீர் விரைவில் செய்யவிருக்கும் புதிய வேக நடைச்சாதனையிலும் நிச்சயமாக வெற்றி பெறுவாரென்ற நம்பிக்கை எனக்குண்டு" என்றார்.

வைபவத்தில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சிவஞானம் வட்டாரக்கல்வியதிகாரி ஜனாப் எம். ஏ. ஸி. ஏ. ஸலாம் ஜனாப் முகிதீன் பிச்சை உட்படப்பலர் உரையாற்றினர். (செ-இ)

அஞ்சலி:

## சேவைகள் மறையாது

மக்கள் சேவையே மகேசன் சேவை என்று கருதி, மண்டைதீவு மக்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்து வந்த திரு. க. கைலாசபிள்ளையின் பொதுச்சேவையை அறிந்து கொண்ட மண்டைதீவு மக்கள் தொடர்ந்து நாற்பது ஆண்டு மண்டைதீவுக் கிராமசபைத் தலைவராக நியமித்திருந்தார்கள். அக்காலங்களில் மண்டைதீவுக் கிராமத்தின் அபிவிருத்திக்காக அல்லும் பகலும் அயராது கடுமையாக உழைத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது மறைவு மண்டைதீவு மக்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

மண்டைதீவு முன்னாள் உபதபால் நிலைய அதிபராகக் கடமையாற்றியபோது அக்காலங்களில் தனது கடமையே கண்ணாய் இருந்து பொது மக்களின் நன்மதிப்பையும் உயர் அதிகாரிகளின் பாராட்டையும் பெற்றவர் எனலாம். சிறந்த கல்விமானாக விளங்கியவர். அதோடு கிராம மக்களின் கல்விச்சேவைக்குத் தன்னாலான பங்கைச் செலுத்தியவர். தெய்வபக்தியுள்ள இவர் மண்டைதீவு இந்து ஆலயங்களின் திருவிழாக்காலங்களில் எல்லாம் ஒன்றிக்கலந்து உழைத்தார். மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்து சமயத்தொண்டுகள் பல செய்தவர் திரு. கைலாசபிள்ளை.

பழகுவதற்கு இனியவரான அமரர் திரு. கைலாசபிள்ளை கடந்த சில நாட்களாகநோய் வாய்ப்பட்டிருந்த போதும் பொதுச்சேவையில் ஓய்வின்றி ஈடுபட்டு உழைத்து வந்தார். முதுமை அடைந்த போதும் செயல்களில் எல்லாம் துடிப்புள்ள இளைஞனாகத் திகழ்ந்தார். அவர் மறைந்து விடலாம். ஆனால் அவரது இனிய நினைவுகள், சேவைகள் மறைந்துவிடாது.

-என். ஆர். சந்திரன்

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை கடைத்தெரு. வேம்படி ஸ்ரீசித்திவிநாயகர் பெருமான் வருடாந்த மகோற்சவம்: நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 27 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. (செ)


வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா ஸமேத
வைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

**பாலஸ்தாபன விஞ்ஞாபனம்**

4-2-80 திங்கட்கிழமை மாலை கர்மாரம்பம்.

**6-2-80 புதன்கிழமை முற்பகல் 10-36 மணி** முதல் 11-50 மணி நேரம் வரையிலான சுபநேரத்தில் **பாலஸ்தாபன அபிஷேகம் நடைபெறும்.**

4869 தேவஸ்தானம்.



## உலக சாதனை

சாதனை வீரர் பரீட் நஸீர் அவர்கள் தனது 3-வது சாதனையாக வேகநடையை 29-2-80-ல் யாழ். நகரில் ஆரம்பிக்க எண்ணியுள்ளார்.

இந்நிகழ்ச்சியின் போது அவருக்கு உதவி செய்ய விரும்பும் நிலையங்கள், நிறுவனங்கள் தனிப்பட்டவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பரீட் நஸீர் உலக சாதனை விளையாட்டுக்கழகம்,
274, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

4879



## தேவை

விசுவமடுவில், நோர்வே நாட்டு றெட் பாணு (Redd-Barna) ஸ்தாபனத்தினரால் நடத்தப்படும் கைத்தொழில் பேட்டை பங்களாவிற்கு, பாதுகாவலர் / சமையலாளர் தேவை. விண்ணப்பதாரர் மேனாட்டு சமையல் தெரிந்தவராகவும் அறுபது வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். மாதச் சம்பளம் ரூபா 400/- விண்ணப்பிப்போர் நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.

நிருவாகஸ்தர்
சலோம் (SHALOME)
றெட்றிக்கோ றோட்,
பரந்தன்.

4878


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கைலாசபிள்ளை

மண்டைதீவைச் சேர்ந்த உயர்திரு கணபதிப்பிள்ளை கைலாசபிள்ளை (சமாதான நீதவான்) அவர்கள் காலமானார். இவர் கால்நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக அல்லைப்பிட்டி - மண்டைதீவு கிராமசபைகளின் முன்னாள் தலைவரும், மண்டைதீவு முன்னாள் உப-தபால் அதிபரும், அகில இலங்கை கிராமசபைத் தலைவர்களின் உபதலைவரும், அகில இலங்கை உபதபால் அதிபர்களின் சங்கத் தலைவரும், முன்னைநாள் பண்ணை போக்குவரத்துச் சபைத் தலைவரும், மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தவும் ஆவார்.

இவர் வள்ளியம்மையின் அன்புக்கணவரும், அருளாம்பிகை, கணபதிப்பிள்ளை, கணேசமூர்த்தி, புனிதவதி, மகேஸ்வரி, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஈழவேந்தன் (மத்திய வங்கி, கொழும்பு) சரோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகலட்சுமி, கனகரத்தினம் (அதிபர் இசிப்பத்தானை மகா வித்தியாலயம் கொழும்பு) இராசலட்சுமி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றபசுபதிச் செட்டியார், காலஞ்சென்ற டாக்டர் சோமசுந்தரம், சந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும், யாழினி, எழிலினி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-2-80 ந் திகதி பிற்பகல் 4 மணியளவில் மண்டைதீவில் நடைபெறும், இதை உற்றாரும் உறவினர்களும் நண்பர்களும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

4884 கை. கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பிறர் என்ன அபிப்பிராயம் தெரிவிக்கின்றனரென அறிய ஆசைப்படாதே- அல்லாமல் உனது நோக்கமும் அதை அடிப்படையாய்க் கொள்ளாதிருக்கட்டும். தனது சுயேச்சைப்படி எண்ணிக் கொள்வது ஒருவரது அஞ்சாமையைக் காட்டும்.

-மகாத்மா காந்தி

# "இலங்கையில் பத்திரிகைகள் சுயமாக இயங்க முடியாத நிலை!"

## தமது பேச்சுக்களைத் திரித்து வெளியிடுகின்றன என்கிறார் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

''இலங்கையில் இன்று பத்திரிகைகள் சுயமாக இயங்கமுடியாத நிலையில் அரசாங்கத்திற்குத் துதிபாடவேண்டிய நிலையிலிருக்கின்றன. எனது பேச்சுக்கள் பல திரித்து எழுதப்பட்டுள்ளன.''

யாழ். மாநகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாழ்க்கைச் செலவு உயர்வு எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்,

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணிச் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''சில பத்திரிகைகள் சுயமாகச் சுதந்திரமாக இயங்க முயற்சித்தாலும், அவற்றால் அவ்வாறு இயங்கமுடியாதவாறு செய்யப்படுகிறது. அமைச்சர் லலித் அத்துலத்முதலியுடன் யாழ் செயலகத்தில் நடைபெற்ற மகாநாட்டில் விலைவாசி உயர்வை ஆதரித்துப் பேசியதாக எனது பேச்சைத் திரித்துச் சில பத்திரிகைகள் எழுதியுள்ளன.

''தென்னிலங்கையில் அரசுக்கு எதிராகத் திரண்டு வரும் எதிர்ப்புக்கு ஆப்பு வைக்கும் நோக்கமாகத் தப்பான பிரசாரங்களை அரசு மேற்கொண்டுவருகிறது.

''அரசாங்கச் செயலகத்தில் வர்த்தக அமைச்சருக்கு இவ்விலையேற்றம் மக்களுக்குப் பாதகம் விளைவிக்காமல் இருக்கவேண்டும். மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்தால் அதற்கு நாம் ஒத்துழைப்போம் என்று தெரிவித்தேன். அதைச் சில பத்திரிகைகள் தவறுகப் பிரசாரஞ் செய்தன. அதை வைத்துக் கொண்டு ஜனாதிபதி மாத்தறையில் நான் விலையேற்றத்தை ஆதரிப்பதாகக் கூறினார். இப்படித் தப்பான வழியில் பிரசாரம் செய்தாலும் மக்கள் அதை நம்பத் தயாராக இல்லையென்பதை அரசு இப்போதாவது உணர்ந்திருக்கும்.

''வித்தியாலங்கார, மொறட்டுவாப் பல்கலைக்கழக மாணவர்கள் பாதிக்கப்பட்டபோதும் நான் பாராளுமன்றத்தில் தெளிவாக எடுத்துக்கூறினேன். எங்கு அநீதி நடந்தாலும் அதை நாம் எதிர்க்கத் தயங்கமாட்டோம்.

''பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் 26 தமிழரும், 30 சிங்களவரும் சிறைவைக்கப் பட்டுள்ளனர். இதைப் பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்துவிட்டன. இப்படியாக அரசு பத்திரிகைகளை உபயோகித்துவருகிறது.

''எமது நாணயத்தின் பெறுமதி மிகவும் குறைந்துவிட்டது. 77ம் ஆண்டு 900 கோடி ரூபா செலவில் அமைக்கப் படும் வீடமைப்புத் திட்டம் 1983ம் ஆண்டு முடிவடையுமெனப் பிரதமர் கூறினார். ஆனால் அது இன்று இரட்டிப்பாகுமெனத் தெரிவிக்கப்பட்டது. இப்படியாகப் பணவீக்கம் ஏற்பட்டுவருகின்றது.

''தென்னிலங்கை முற்போக்குச் சக்திகள் காலந்தாழ்த்தாது, தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டு போராடவேண்டும். அப்படியான ஒரு போராட்டம் நடைபெறும்போது தமிழ் மக்களும் தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளுடன் ஒன்று சேர்ந்து போராட்டத்தை நடத்தத் தவறமாட்டார்கள்.

''விலைவாசி உயர்வை அரசு கொண்டு வரும்போதெல்லாம் சிறு சம்பள உயர்வை வழங்குவதன் மூலம் மக்களைத் திருப்திப்படுத்தமுடியுமென நினைத்துள்ளது.''

### யாழ்ப்பாணம் எம். பி. பேச்சு

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:

''தமிழ் மக்களின் பிரச்னையை எம்மால்தான் தீர்க்க முடியும். அதேவேளை சிங்கள மக்களின் பிரச்னையைச் சுதந்திரக்கட்சியாலோ, ஐக்கிய தேசியக்கட்சியாலோ தீர்த்து வைக்கமுடியாது.

''ஏழை மக்களுக்கு நிவாரணம் வழங்க எந்தவொரு முற்போக்கு இயக்கம் முன்வந்தாலும் அதற்கு ஆதரவு வழங்க நாம் தயங்கமாட்டோம்.

''இன்றைய விலைவாசி உயர்வால் தமிழ்மக்களைக் காட்டிலும் சிங்கள மக்கள் தான் அதிகமாகப் பாதிக்கப் பட்டுள்ளனர். ஆதலால் அவர்களுக்காக இடதுசாரிகள் போராடவேண்டும்'' என்றார். (கொ-கு)

## மக்கள் கருத்து

### பயனுள்ள நடவடிக்கை

சமீபகாலங்களிலும் பார்க்க யாழ். மாநகர முதல்வர் வெளிநாடு சென்று திரும்பிய பின்னர் யாழ். மாநகரில் பாரிய முன்னேற்றம் காணப்படுகின்றது. நகரம் பொலிவுற்று விளங்குவதற்கும் வெளிநாட்டவர் யாழ். நகரைப் பாராட்டுவதற்கும் மூலகாரணம் நவீன சந்தையின் அமைப்பேயாகும்.

இத்தகைய எழிலூட்டும் மக்கள் நவீன சந்தையில் சமீபத்தில் மிக வரவேற்கக்கூடிய முன்னேற்றம் ஒன்று நடைபெற்றுள்ளது. அதாவது நடைபாதை வியாபாரிகளின் தொல்லை அறவே ஒழிக்கப்பட்டுள்ளது. நடைபாதை வியாபாரிகள் சுகாதார, தரமற்ற பொருட்களை மலிவான விலையில் விற்று மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதோடு, லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து தரமான பொருட்களை நியாயமான விலைக்கு விற்கும் நவீன சந்தை வர்த்தகர்களுக்கும் இடைஞ்சல் விளைவிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட வியாபாரிகளை துணிவுடனும் தைரியத்துடனும் அப்புறப்படுத்திவிட்டார்கள் மாநகரசபை ஊழியர்கள். திறமைமிக்க சுகாதார பரிசோதகர் திரு. தம்பிநாயகத்தின் தலைமையில் மக்கள் நவீன சந்தை மேற்பார்வையாளர்கள், தொழிலாளர்கள் அத்தனைபேரும் ஒருங்கிணைந்து செயற்கரிய சாதனையைப் புரிந்ததன்மூலம் மாநகர முதல்வருக்கும், ஆணையாளருக்கும், சுகாதார வைத்திய அதிகாரிக்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளார்கள்.

மக்கள் நவீன சந்தைக்கு நாளாந்தம் வருகைதரும் பல்லாயிரக்கணக்கான பெரியோர்களுக்கும், தொழில் பார்க்கும் யுவதிகளுக்கும், வர்த்தகப் பெருமக்களுக்கும், வரியிறுப்பாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் நிம்மதி கிடைக்குமென்பது தெளிவாகிறது.

**கண்ணபுரம் வேலன்**
யாழ்ப்பாணம்

### ஆலயத்தில் நாகபாம்பு!

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் கும்பாபிஷேகம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாவதற்குச் சில மணி நேரத்திற்கு முன்னர் ஆலய மூலஸ்தானத்தினுள் நாகபாம்பு ஒன்று தோன்றியது.

தோன்றிய சிறிது நேரத்திலேயே அந்தப் பாம்பு தீர்த்தக்கரையினுள் சென்று மறைந்தது. (கு)

மான்ய வெட்டினால்

# முதலாளி வர்க்கமே நன்மையடைந்து வருகிறது

## யாழ். நகரில் வாசுதேவா

(யாழ்ப்பாணம்)

'அபிவிருத்திக்கான மான்யத்தை வெட்டுவதாக அரசு கூறுகிறது. கடந்த 20 வருடங்களாக என்ன அபிவிருத்தி நடந்தது. முதலாளிவர்க்கமும் அரசின் ஆதரவாளர்களும் மட்டும் அபிவிருத்தியடைந்துள்ளனர். ஏழைத் தொழிலாளிகள் விவசாயிகள் பழைய நிலையிலேயே உள்ளனர்'

யாழ். நகரமண்டபக்கூட்டத்தில் பேசிய திரு. வாசுதேவநாணயக்காரா, ஆரம்பத்தில் 15 நிமிடங்களில் தமிழில் பேசுகையில் கூறியதாவது:

''எனக்கு உங்கள் தமிழ் மொழி நல்லாகப் பேசமுடியாமைக்கு வருந்துகிறேன். தொழிலாளர் வர்க்கம் தொடர்ந்து துன்பத்தை அனுபவித்துவருகின்றது. வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன.

''உலக பொருளாதார நெருக்கடி காரணமாக அரசு பிரச்னை தீர்க்கமுடியாதென்று கூறி, இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. அரசாங்கம், மக்களைக் கொடுமைப்படுத்தி வருகின்றது.

''தொழிலாளர் மாத்திரம் பாதிக்கப்பட. விவசாயிகளும், மாணவர்களும், பாதிக்கப் பட்டுள்ளனர். தமிழ் பேசும் இனம்பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மோசமாகு முன் தடுத்து நிறுத்த வேண்டும். தொழிலாளர்எல்லோரும் ஒன்றுபடவேண்டும். வெகுஜன நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

விலைவாசியை இந்த அரசு மட்டும் உயர்த்தவில்லை. கடந்த காலத்தில் ஆட்சி செய்த அத்தனை அரசுகளும், விலைகளை உயர்த்தியுள்ளன. ஒவ்வொரு அரசும், முன்பிருந்த அரசைவிட, விலையைக் கூட உயர்த்தியது. பொருளாதார நெருக்கடி என்று காரணம் கூறுகிறார்கள். இந்த நெருக்கடி தொழிலாளர்மீது சுமத்தப்படுகிறது.

அபிவிருத்தி என்று கூறினார்கள். என்ன அபிவிருத்தி நடந்தது. மக்கள் கஷ்டம் அதிகரித்துவருகிறது. முதலாளிமார்கள் தான் அபிவிருத்தி அடைந்துள்ளனர். அவர்கள் நலன்களைப் பாதுகாக்கத்தான் இந்த அரசு இருக்கிறது. இந்நாட்டில் 95 வீதமான மக்கள் தொடர்ந்து துன்பத்தை அனுபவித்து வருகின்றார்கள். அவர்களுக்கு விடிவில்லை; விமோசனம் கிடையாது.

பொருளாதார நிலைமை போர் நிலைமை. என வர்ணிக்கிறார் ஜனாதிபதி உண்மை தான். யாழ்ப்பணத்தில் அண்மையில் போர் நிலைமை ஏற்பட்டு, இளைஞர்கள் பலியானார்கள். கொம்பெனித்தெருவில் போர் நிலைமை ஏற்பட்டு, சிலர் பலியானார்கள். மறியல் செய்த தொழிலாளர் மீது குண்டர்களை ஏவிவிட்டுப் போர் நிலைமையை உருவாக்கினார்கள். இந்த அரசு ஆட்சிக்கு வந்து சில கிழமைக்குள் நாடு முழுவதும் இனக்கலவரம், கொள்ளை, கொலை கற்பழிப்பு நடாத்தினார்கள். ஆதலால் போர் நிலைமை எப்பவோ ஏற்பட்டுவிட்டது. இன்று போர் நடந்துகொண்டிருக்கிறது. இப்போது ஜனாதிபதி பொருளாதாரப் போர் பற்றி கூறுகிறார்.

மக்களை பட்டினிபோடுவதன் மூலமே, பிரச்னையைத்தீர்க்க அரசு முயலுகிறது. எதிர்ப்புத் தெரிவிப்பவர்களின் உயிர்களை துப்பாக்கிமுனையில் பறிக்க அரசு தயாராக இருக்கிறது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசின் தலைவர் இந்நாட்டை சரியான முறையில் ஆளமுடியாவிட்டால், ஆளத் தெரியாவிட்டால் வேறுநாட்டிற்குச் சென்றுவிடவேண்டும். பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டுமானால் ஆட்சியை விட்டு வெளியேறவேண்டும்.

கடந்த அரசு மக்களுக்குப் பல வாக்குறுதிகளை அளித்து பதவிக்குவந்தது. பின்னர் மக்களின் கோரிக்கைகளை ஊதா

(2-ம் பக்கம் பார்க்க)

"மிளகாய்இறக்குமதிக் கொள்கையால்

# வடபகுதி இளைஞர்கள் பெரிதும் பாதிப்பு"

## ஈழவேந்தன் கவலை

(யாழ்ப்பாணம்)

''விஸ்வமடு, முத்தையன் கட்டு, திருவையாறு பகுதியில் அரசின் மிளகாய் இறக்குமதிக் கொள்கையில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், மிளகாய் உற்பத்தியைக் கைவிட்டுள்ளனர். இதனால், இளைஞருக்கும், நாட்டுக்கும் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.''

யாழ். நகரமண்டபத்தில் நடந்த விலைவாசி எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிய திரு. ஈழவேந்தன் மேற்கண்டவாறு கூறினார். ஈழவேந்தன் மேலும் கூறியதாவது:- நான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் இராணுவ அதிகாரிக்கு இதனைத் தெரிவித்தேன்.

நூற்றுக்கணக்கான இளைஞர்கள் வெளிநாடுசென்று விட்டனர். விஸ்வமடுவில் முன்பு 1300 இளைஞர்கள் இருந்தனர். இன்று 300 இளைஞர் மட்டுமே இருக்கின்றனர்.

''சிறிமா அரசை நாம் பாராட்டுவதாக நினைக்கக் கூடாது. சிறிமா ஆட்சிக்காலத்தில் நம் இளைஞர்கள் மிளகாய் உற்பத்தியில் கவனம் செலுத்தினர்கள். ஒரு இளைஞர் வருடம் 25 ஆயிரம் ரூபாயை மிளகாய் மூலம் உழைத்தார்கள் என்று அந்த இராணுவ அதிகாரி அறிந்திருந்தார்.

நாம் நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அரசியல் பிரச்னையும் பொருளாதாரப் பிரச்னையும், முட்டிமோதிக் கொண்டிருக்கிறது. இதற்கு விடிவுகாண வேண்டும். நாம் முடிவுதேட வேண்டும் எங்களை எங்கள் மண்ணுடன் விட்டுவிடுவதுதான் இதற்கு ஒரே வழியாகும்.

உத்தியோகம் புருஷ லட்சணம் என்றும், கோழி மேய்ந்தாலும் கொர்ணமேந்தில் மேய்க்கவேண்டும் என்று கருதியகாலம் போய்விட்டது. இன்று விவசாயியை திருமணம் செய்யவே நமது பெண்கள் விரும்புகிறார்கள். அது உயிருக்கும் பாதுகாப்பு உடைமைக்கும் பாதுகாப்பு, வேலைக்கும் பாதுகாப்பு.

''காங்கேசன்துறைசீமெந்துத் தொழிற்சாலை, மகாதேவா பாலம் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதால் சிங்கள மகனுக்கு எந்தவிதத்திலும் நஷ்டம் ஏற்படப்போவதில்லை. ஏன் எங்கள் பகுதி அபிவிருத்தி செய்யப்படுவதில்லை?

''அரசு மிளகாய் இறக்குமதியை நிறுத்த வேண்டும். இங்குள்ள இளைஞர்களுக்கு மிளகாய் உற்பத்தியில் ஊக்கம் அளிக்கவேண்டும். எங்கள் பிரச்னைகள் தீர ... இணைந்து செயல்படுவோம். (கொ-கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனித உரிமைகள் பற்றி பொலிசாருக்குப் போதிக்கவேண்டும்"

## யாழ். மேயர் விஸ்வநாதன்

(யாழ்ப்பாணம்)

"மனித அடிப்படை உரிமைகள் பற்றி பாடசாலைகளில் மாணவர்களுக்குப் போதிக்க ஆட்சியாளர் முயற்சி எடுக்கிறார்கள். இதனை பொலிஸ், இராணுவம், கடற்படை முகாம்களில் தான் போதிக்க வேண்டும். அப்படிப்போதித்திருந்தால் 77ம் ஆண்டு இனக்கலவரமும், யாழ். நகரில், தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவித நிகழ்ச்சிகளும் நடந்திருக்காது."

வாழ்க்கைச்செலவுஉயர்வை ஆட்சேபித்து, யாழ். நகர மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் யாழ். நகரமுதல்வர் திரு. இராஜாவிஸ்வநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணிச் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. இராஜா விஸ்வநாதன் மேலும் கூறியதாவது.

'யாழ்ப்பாணத்தில் அவசர காலச்சட்டம் இருந்த போது பொலிசார், இராணுவத்தினரின் அத்துமீறல் தலைதூக்கியது. தமிழ் இளைஞர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். தொழிலாளர் உரிமைகள்பறிக்கப்பட்டது. விலைவாசிஉயர்ந்து கொண்டுபோகிறது. இதற்கெல்லாம் எதிராக கண்டிப்பதற்கு இங்கு கூடியிருக்கிறோம்.

"அவசரகாலச் சட்டத்தின் போது தமிழ் இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். சில இளைஞர்கள் இன்னும் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றனர். தமிழ்த் தலைவர்கள்' இளைஞர்கள் பற்றி குரல் எழுப்பிவருகின்றனர் கூட்டணியும் குரல் எழுப்பி வருகிறது.

'தொழிலாளர் எல்லாரும் ஒன்றுபடவேண்டும். இல்லாவிடில் பாடுபட்டு எடுத்த உரிமைகளை பறிகொடுக்கவேண்டியேற்படும், படிப்படியாக இழக்க வேண்டிவரும்

"இந்தியாவில் நடந்த இந்து மாநாட்டில் ஈழவேந்தனும், சம்பந்தனும் கலந்துகொண்டு 77 இனக்கலவரம் பற்றி எடுத்துகூறினார்கள். இவர்கள் நாடு திரும்பியதும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். தமிழ் தலைவர்களும் தொழிற் சங்கத் தலைவர்களும் குரல் எழுப்பியதைத் தொடர்ந்து விடுதலை செய்யப்பட்டனர். இதுதானா தார்மீக அரசு?

'தமிழ்மக்களின் அபிலாஷை சுதந்திர புருஷர்களாக வாழ வேண்டும் என்பது தான். அதற்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும். சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்ட இடதுசாரியினர் சொல்லளவில் நிற்காமல்செயலிலும் இறங்கவேண்டும்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான கடைகள் விடுமுறை நாட்களிலும் திறக்கப்பட்டு தொழிலாளரிடம் வேலை வாங்கப்படுவதாக இங்கு கூறப்பட்டது. யாழ். மாநகரசபைக்கு சொந்தமான கடைகள் ஞாயிறு, போயா தினங்களில் பூட்டப்படுகிறது. தீபாவளி, நத்தார் போன்ற தினங்களில் எங்கள் அனுமதி பெற்றே திறக்கப்படுகிறது. தொழிலாளருடன் கண்ணியமாக நடந்துகொள்கிறேன். இப்புகார்பற்றி நான்பரிசிலனை செய்கிறேன். தொழிலாளர் குறைகளை நாங்கள் உதாசீனம் செய்யமாட்டோம்."

(கொ-சு)

# உயர்கல்வி அமைச்சு ஜனாதிபதியின் பொறுப்பில்?

## அமைச்சரவையில் மாற்றம் வரலாம்

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சர் பதவியை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வகிக்கலாம் என்று தெரியவருகின்றது.

நாட்டின் கல்வி அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

பெருந்தெருக்கள் திணைக்களம் பிரதமரிடம் ஒப்படைக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுக்கல்வி அமைச்சு திரு. ரணில் விக்கிரமசிங்காவிடம் ஒப்படைக்கப்படலாம் எனக் கருதப்படுகிறது.

திரு. நிஸங்க விஜயரத்னவுக்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சு பதவி வழங்கப்படலாம் எனக்கூறப்படுகின்றது.

திரு. டி. பி. விஜேதுங்கா தந்தித்தொலைத் தொடர்பு அமைச்சராக நியமனம் பெறுவார் என நம்பப்படுகிறது.

தோட்டக் கைத்தொழில் அமைச்சும், பொதுநிர்வாகமும் திரு. மேஜர் மொண்டேகு ஜெயவிக்ரமாவுக்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சு மாற்றங்கள் அடுத்த கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. (நா-சு)

# குறிஞ்சிக்குமரன்குடமுழுக்கு 'இராசு' பங்குபற்றுவார்

(கண்டி)

பேராதனைப் பல்கலைக்கழகத்துக் குறிஞ்சிக் குமரனின் கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை முற்பகல் இணுவில் சிவாகம கிரியா சிரோரதனம் பிரம்மஸ்ரீ இராமநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பதினைந்து தினங்கள் மண்டலாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்துசமய விவகார அமைச்சர் திரு. செ. இராசதுரை, அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. வீ. சிவசுப்பிரமணியம், கண்டி அரசாங்க அதிபர் திரு. கமுனுபொல உட்படப் பலர் இவ்வைபவத்தில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

பேராதனைப் • பல்கலைக்கழகத்து மலையுச்சி ஒன்றில் உள்ளத்தை ஈர்க்கும் இயற்கை அழகு நிறைந்த அமைதியான சூழ்நிலையில் அமைந்துள்ள இவ்வாலயம் 1968ம் ஆண்டு இந்து மாணவர் சங்கத்தினரின் பெருமுயற்சியால் அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தின் விமானங்களிலும் கோபுரங்களிலும் அமைந்துள்ள சிற்பங்கள் பலராலும் போற்றப்படுகின்றன. இக்கோவிலை அமைப்பதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்த அமரரான பேராசிரியர் பேரம்பலம் கனகசபாபதியின் சேவையை நினைவுகூருமுகமாக அன்னாரின் திருவுருவப் படத்தினை, ஆலயத்தில் அமைந்துள்ள இந்து மாணவர் சங்க நூல்நிலையத்தில் திறந்து வைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் இரவு நடைபெறும் நிகழ்ச்சிகளின்பொழுது இளைப்பாறிய நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அமரரின் படத்தைத் திரைநீக்கஞ் செய்துவைப்பார்.

இந்து மாணவர் சங்கத்தினரின் வருடாந்த சஞ்சிகையான 'இந்து தருமம்', கும்பாபிஷேகத்தையொட்டிக் கும்பாபிஷேகச் சிறப்புமலராக வெளிவரவுள்ளது. பல தமிழ்நாட்டு ஈழத்து அறிஞர்களின் படைப்புக்களுடன் மாணவர்களின் ஆக்கங்களையும் தாங்கி வெளிவரவிருக்கும் இம்மலரைத் திருமதி சிவசுப்பிரமணியம் வெளியிட்டுவைப்பார்.

சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. செலவில் ஒரு பகுதிக்கு அரசாங்கம் உதவி வழங்கியுள்ளது. அரசின் இந் நல்லெண்ணத்தை இந்து மாணவர் சங்கமும், பொறுப்பாண்மைக் குழுவும் பாராட்டு . ாகக் பொறுப்பான்மைக் குழுச் செயலாளர் கலாநிதி இ. குமாரவடிவேல் தெரிவித்தார். [கு]

# "சுருட்டு முதலாளிகளுக்கு நாளை வரை அவகாசம்"

(யாழ்ப்பாணம்)

"தைப்பொங்கல் கணக்குத் தீர்வையின் போது குறைத்து வழங்கிய மீதிப்பணத்தை சுருட்டு முதலாளிமார் நாளை 6ம் திகதிக்கு முன் வழங்கத் தவறினால் அம் முதலாளிமார்களின் பெயர்ப்பட்டியல் வெளிப்படுத்தப்படும்."

இவ்வாறு அகில இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. மா. க. முதலியார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"நாலு தொழிலாளர்களை வைத்துத் தொழில் நடத்தும் சுருட்டு முதலாளிமார் கூட வசதியாக வாழ்கிறார்கள். ஆனால் அன்றாடம் தொழில் செய்யும் சுருட்டுத் தொழிலாளி அன்றாடம்சீவனம்நடாத்தவே முடியாது கஷ்டப்படுகின்றான். எனவே பொங்கல் கணக்கின் மிகுதிப் பணத்தை வழங்கிய முதலாளிகள் தவிர ஏனைய முதலாளிமார் உடனடியாக மிகுதிக் கணக்கைத் தீர்க்க முன்வர வேண்டும்" என்று திரு. முதலியார் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (கொ-அ)

# யாழ். கலாச்சார மன்ற வள்ளுவர் விழாப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கலாச்சார மன்றம் வள்ளுவர் விழாவினை முன்னிட்டு இவ்வருடம் மே மாதம் திருக்குறள் மனன, கட்டுரை, பேச்சுப்போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

திருக்குறள் மனனப் போட்டியில் கீழ்ப்பிரிவினருக்கு அறத்துப்பால் முதல் 30 அத்தியாயங்களிலும் மேற்பிரிவினருக்கு அறத்துப்பால் 38 அத்தியாயங்கள், பொருட்பால் முதல் 22 அத்தியாயங்களிலும் இடம் பெறும்.

திருக்குறள் கட்டுரைப் போட்டிகள் கீழ்ப்பிரிவினருக்கும் மேற்பிரிவினருக்கும் ஆயத்தம் செய்வதற்கான எட்டு தலையங்கங்கள் கொடுக்கப்படும். இதில் நான்கு தலையங்கங்கள் மாணவர்கட்குக் கொடுத்து அதில் ஒன்றைப் பற்றிக்கட்டுரை எழுதும்படி கேட்கப்படும்.

திருக்குறள் பேச்சுப்போட்டியில் கீழ்ப்பிரிவினர் பேசவேண்டிய நேரம் 06 நிமிடம், மேற்பிரிவினர் பேசவேண்டிய நேரம் 08 நிமிடம்.

பேச்சுப் போட்டிக்குரிய 10 தலையங்கங்கள் ஒரு மாதத்திற்கு முன்னர் கொடுக்கப்படும். அதில் ஒரு தலையங்கத்தில் போட்டியின்போது பேச

[5ம் பக்கம் பார்க்க]

# ஊரெழு அருள்மிகு மீனாட்சி அம்பாள்

ஊரெழு கிராமத்தின் மேற்குப் பகுதியில் சோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கண்ணை அம்மன்என வழங்கி வரும் அருள்மிகு மீனாட்சி அம்பாளுக்கும், அங்குள்ள ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்ட ஓராண்டு நிறைவு தினம் தைத்திங்கள் உத்திர நட்சத்திரதினமாகிய இன்று சிறப்பாக நடைபெறுகிறது. கடந்த வருடம் பெப்ரவரி முதலாம் திகதி தைத்திங்கள் உத்திர நட்சத்திரதினத்தன்று இங்கு மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**அ. கனகசூரியர்**

1922ம் ஆண்டில் சிவஸ்ரீ ச. துரைசாமிஐயர் இந்த ஆலயத்தை ஸ்தாபித்தார். இதன் உரிமையாளரும், பிரதம பூசகருமாகிய இவர்,காலத்துக்குக் காலம் திருப்பணி வேலைகளை மேற்கொண்டு ஆலயத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத்துவந்தார். 1957ம் ஆண்டில் இவர் காலமானதால், கோவிலின் நிர்வாகப் பொறுப்பையும், பூசை உரிமையையும் இவரது மருமகனாகிய சிவஸ்ரீ மு. கிருஷ்ணசாமிக் குருக்கள் ஏற்றுக்கொண்டார்.

இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மீனாட்சி அம்பாள்மீது அளவு கடந்த பக்தி வைத்திருக்கும் சைவப்பெருமகன்ஒருவர், பெரும் பொருட் செலவில் புனருத்தாரண வேலைகளைச் செய்வித்தார். மூலமூர்த்திக்குரிய கோவில், ஆலய நிர்மாண சாஸ்திரங்களுக்கு அமைய அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் சிறப்பானவகையில் அமைக்கப்பட்டிருப்பதுடன்; விநாயகர், சுப்பிரமணியர், சனீஸ்வரன், சண்டேஸ்வரி ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் தனித்தனியான கோயில்கள், அதற்குரிய சிறப்புக்களுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இந்த ஆலயத்திற்கு புதிதாக சித்திரத் தேரொன்று அமைக்கப்பட்டு வருகிறது. மயிலிட்டி வடக்கு சரவணன் கவின் கலையக பிரதம ஸ்தபதியார் திரு சரவணமுத்து ஜெயராசா தலைமையிலான குழுவினர் இதற்கான வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். எதிர்வரும் ஆவணி மாதத்தில் நடைபெறவிருக்கும் வருடாந்த மகோற்சவத்தின்போது மீனாட்சி அம்பாள் புதியசித்திரத்தேரில் எழுந்தருளுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# "தமிழ்மக்களின் சுதந்திரம் இன்றைய அரசில்தான் கிடைத்தது"

## மட்டுநகர் சுதந்திரதின விழாவில் 'கனகர்'

(மட்டக்களப்பு)

"தமிழ்பேசும் மக்களின் பூரண சுதந்திரம் முப்பத்தொரு ஆண்டுகளின் பின்னர் இன்றைய அரசில் தான் கிடைத்துள்ளது"

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு. எம். கனகரத்தினம், மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற சுதந்திரதின விழாவில் பேசுகையில் கூறினார்.

மட்டக்களப்பு விளையாட்டரங்கில் நடைபெற்ற இந் நிகழ்ச்சி ஆரம்பத்தில் தமிழிலும் சிங்களத்திலும் தேசிய கீதம் பாடசாலை மாணவ மாணவிகளின்அணிவகுப்பைத் தொடர்ந்து அங்கு நடைபெற்ற கூட்டத்தில் திரு. கனகரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இலங்கை சுதந்திரமடைந்த போதிலும் தமிழ் மக்கள் பூரண சுதந்திரமடையவில்லை. 31 ஆண்டுகளின் பின்னர் தார்மீகத் தலைவர் திரு. ஜே ஆரின் தலைமையில் இப்போதுதான் பூரண சுதந்திரம் கிடைத்துள்ளது.

"எழுத்தில் மாத்திரமல்ல சட்டரீதியாக வரலாற்றில் என்றுமே கிடைக்காத உரிமைகளைத் தமிழ்மக்கள் இன்று பெற்றுள்ளனர். அதனை அமுல் செய்ய அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டு 25 வருடங்களாக எமது உரிமைக்காகப் போராடிய தம்பி இராசு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

"இன்றைய தினத்தில் சுதந்திரத் தந்தைகளான சேர் பொன் இராமநாதன், எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டாரநாயக்கா, டி. எஸ். சேனநாயக்கா போன்றோரை நினைத்துப்பார்க்கவேண்டும்.

"நான் அரசியல் பேச இங்கு வரவில்லை. இது அரசியல் பேசுவதற்கு இடமுமில்லை. அபிவிருத்திப்பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் நாம் வரும்போது அரசியலைப் பேசுவோம். அப்போதுஉங்கள் கொள்கைப்படி, வாக்களியுங்கள்" என்றார்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. டிக்சன் நிலவீர உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

மட்டுநகரில் சுதந்திர தினத்த முன்னிட்டு சகல அரச காரியாலயங்களிலும் தேசியக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. (கு)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் சகல துறைகளிலும் இன்று புறக்கணிக்கப்படுகின்றனர்

## 'அமிர்' கவலை

(யாழ்ப்பாணம்)

"தமிழ்பேசும் மக்கள் இந்த நாட்டில் சகல துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றூர்கள். நாங்கள் இன்று அடிமைகளாக வாழ்கின்றோம். எம்மை அடக்கியாளலாமென எண்ணிய சிங்களத் தலைவர்கள் தற்போது நிலைமையை உணர்ந்து தமது போக்கை சிறிது மாற்றியுள்ளனர்."

இவ்வாறு எதிர்க்கட்சித் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினூர்.

இவ்வாறு யாழ். தொழில் நுட்பக் கல்லூரி வரவேற்பு மண்டபத்தில், உயர் கல்வி அமைச்சு- தொலைக்கல்வி விஞ்ஞான கணித டிப்ளோமா மாணவர் மன்றம் தமக்கும் பாரியாருக்கும் அளித்தபொது வரவேற்புக்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினூர்.

வரவேற்பு வைபவத்துக்கு, சங்கத்தலைவர் திரு. ஏ. அந்தோனிப்பிள்ளை தலைமை வகித்தார்.

திரு. ஏ. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"கல்வி அமைச்சில் இடம் பெறும்குளறுபடிபோன்று எந்த அமைச்சுகளிலுமே கிடையாது காலத்துக்குக்காலம் வரும் அமைச்சர்கள், புதிய திட்டங்களை வகுப்பதும் பயன்கிடைக்காமல் போவதுமாக கல்வி அமைச்சு உள்ளது.

"கல்வியமைச்சர் அமரர் ஈரியசொல்லையின் காலத்தில் கனிஷ்ட பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கினூர்கள். அந்தப் பல்கலைக்கழகம் மூலம் விஞ்ஞானம்; பத்திரிகைக்கலை போன்ற துறைகளில் டிப்ளோமாபட்டம் வழங்கினூர்கள்

இவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும்போது முன்னுரிமை வழங்குமாறு கல்வி அமைச்சுக்கு நான் கடிதம் எழுதினேன். அக்கடிதத்தில், இவர்கள் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்கள் சித்தியெய்தியுள்ளனர் எனத் தெரிவித்தும் கூட இதுவரை எதுவும் நடைபெறவில்லை.

"தரப்படுத்தல் முறை அமுலில் இருந்த போது தொலைக்கல்வி கணித விஞ்ஞான பயிற்சி நெறிக்கல்வித்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டதாக அண்மையில்தான் அறிய முடிந்தது. 76-ல் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி நெறி 80 லும் முடிவு பெறவில்லையென எண்ணும் போது வேதனை அடைகின்றேன்.

### கூச்சலும் குழப்பமும்

பாராளுமன்றத்தில் எந்தப்பிரச்சனைபற்றி பேசினூலும் கூச்சலும் குழப்பமும் போடுகிறூர்கள் நாம் 30 வருடமாக இந்தத்துறையில் பயிற்சி பெற்றவர்களான தால் நாம் பேசநினைப்பதை பேசியே வருகின்றோம்.

ஐ. தே. க. ஆட்சியில் இதுவரை 26000 ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டதெனவும் 1300 பேர் தமிழர் என்றும் அண்மையில் கல்வி அமைச்சர் பாராளுமன்றத்தில் எமது கேள்விக்குப் பதிலளித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் தமிழ்மக்கள் வேலைவாய்ப்பில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் என்பதை புள்ளிவிபரங்களுடன் ஜனுதிபதிக்கு எழுதிய கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்தேன் இதை ஜனுதிபதியும் ஒப்புக்கொண்டு திருவாளர்கள் தொண்டமான் தேவநாயகம் இராஜதுரை ஆகிய தமிழ் அமைச்சர்களை பணித்ததன் பேரில் மேலும் 800 பேருக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. கடந்த பெப்ரவரி வரை 500 பேருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த அதிகரிப்பு 5000 ரூபா 6000 ரூபா கொடுத்து ஆசிரிய நியமனம் பெறுவதற்கு வாய்ப்பாயிருந்ததே தவிர தகுதியானவர்களுக்கு வாய்ப்புக்கிட்டவில்லை எனக்கு தெரிந்த ஒருவர் எஸ். எஸ்.சி. சித்தியடைந்து விட்டு உயர் கல்வி பெறத்தகுதியில்லாமல் கடை ஒன்றில் சிப்பந்தியாக கடமைபுரிந்தவர் ஒருவர் 5000 ரூபா கொடுத்து ஆசிரியராகியுள்ளார் இதேமுறையில் ஆசிரியபதவி பெற்ற பெண்மணி ஒருவர் பாடசாலை நேரத்தில் சொந்தத் தேவைக்காக வீடு சென்று விடுவார் இவர்கள் மூலம் எமது இளம் சமுதாயத்தினரின் கல்வியை பெருக்கமுடியுமா?

தொலைக்கல்வி நிறுவன ஆலோசகர் குழு பிரதிநிதி திரு. எஸ். ஜெயபாலன் உரையாற்றுகையில் கூறியதாவது:-

"நான் இந்த நிறுவனத்திற்கு கடமையாற்றச் சென்றபோது தொலைக்கல்வி நிறுவனத்தில் கல்விகற்கும் மாணவ மாணவியரின் பதிவுகள் சரியான முறையில் இருக்கவில்லை. அவர்கள் மாணவர் கட்டிய பணத்திற்கான பதிவும் சீராக இருக்கவில்லை. இதனை முன்னர்பொறுப்பானவராக இருந்தவரிடம் கேட்டேன்; அவரிடமிருந்து எதுவித பதிலுமில்லை. இருந்தும் தமிழ் மாணவரது கல்வி பலவகையாலும் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென எண்ணி பணம் கட்டாமல் இருந்தவர்களுக்கும் பாடங்கள் அனுப்பினேன்.

தொலைக்கல்வி நிறுவனத்தில் தமிழ் அலுவலர்கள் குறைவாகவுள்ளனர். இதை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் கவனிப்பதில்லை. ஏதோ விவேகமாக நடந்தால், மூடப்படப் போவதாகச் சிலர் பேசிக்கொள்கிறூர்கள்.

### திறந்தவெளிப் பல்கலைக்கழகம்

"திறந்தவெளிப் பல்கலைக்கழகம் எப்போது அமையுமென்று கூறமுடியாமல் இருக்கிறது. இதற்கான திட்டங்களும் இதுவரை பூர்த்தியாகவில்லை. திறந்தவெளிப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதும் டிப்ளோமா பயிற்சி நெறிப் பிரிவு அங்கு இயங்கும்.

"இக்கல்வியைப் பெறும் சிங்கள மாணவர்களில் 344 பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன. ஆனுல் தமிழ் மாணவர் எவருக்கும் ஆசிரிய நியமனம்வழங்கப்படவில்லை. பல்தொழில் நுட்ப உப அதிபர் திரு. சி. விஜேந்திரா உட்படப் பலர் உரையாற்றினர். (செ)

---

# 'மும்மொழித் திட்டத்தை எதிர்த்துப்போரிட வேண்டும்'

## தமிழ்க்காங்கிரஸ் கிளை தீர்மானம்

(கொழும்பு)

தமிழ் பேசும் மாணவர்கள் மத்தியில் மும்மொழித் திட்டம் அமுல் செய்யப்பட்டால் அதனை எதிர்த்து முழுமையாகப் போராட வேண்டும் என்று அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸின் கொழும்புக்கிளை தீர்மானித்துள்ளது.

இக்கட்சியின் கொழும்புக் கிளைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களில் சில வருமாறு:-

தற்பொழுது நடைமுறையிலிருப்பதும், ஐ. தே. கட்சி அரசினுல் 1978 ல் நடைமுறைப்படுத்தப்பட்டதுமான அரசியலமைப்பு 1918 ன் பின் இந்நாட்டில் உருவாக்கப்பட்ட இன, மத, மொழி, சமூகரீதியில் ஏற்றத் தாழ்வை ஏற்படுத்தும் சட்டங்களை அல்லது அவற்றின் சாரத்தை உள்ளடக்கியிருப்பதாலும் தமிழ்ப் பேசும் மக்களின் குறைபாடுகளைக் களைய நிரந்தர முயற்சி எடுக்காதபடியாலும் மொழிச் சமத்துவமின்மை, தாய் மொழியே போதனுமொழி என்ற நிலை ஏற்படுத்தப்படாமை ஆகியன தமிழ்ப் பேசுமினத்தின் தனித்துவம், நிலைப்பாடு ஆகியவற்றிற்கு இடையூருவது என்பதனை ஆழ்ந்த கவலையுடன் நோக்குவதுடன் இவ்வரசியல் அமைப்பை முற்றுக நிராகரிப்பது என்ற கிளையின் முன்னைய நிலையை மீண்டும் உறுதி செய்து வெளிப்படுத்திக்கொள்கின்றது.

### மும்மொழித் திட்டம்

தற்போதைய அரசியலமைப்பில் ஐ. நா. சாசனத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளில் ஒன்றான தாய் மொழியே போதனு மொழி என்ற நிலை ஏற்றுக்கொள்ளப்படாமையாலும் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு ஏதாவதொரு தேசிய மொழிமூலம் செய்யப்படலாம் என அரசமைப்பு அங்கீகரித்திருப்பதாலும் சிங்களமே அரசகரும மொழி என்ற நிலை தொடர்வதாலும் மும்மொழித்திட்டம் தமிழ்ப் பேசும் மாணவர் மத்தியில் அறிமுகப்படுத்துவது முதலில் உத்தியோகத்திற்காக அரசகரும மொழியைக் கற்கும் நிலையை உருவாக்கி பின் போதனு மொழியாக விரிவடைந்து இன அழிவுக்கு வழி வகுக்கும் எனக் கருதுவதால் தாய் மொழியே போதனு மொழி என்ற நிலையும் இரு தேசிய மொழிகளும் அரசகரும மொழிகள் என்ற நிலையும் எற்படும்வரை தமிழ்ப்பேசும் மாணவர் மத்தியில் மும்மொழித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதனை அது எவ்வுருவில் வந்தாலும் அதனை எதிர்த்து முழுமையாகப் போராடவேண்டுமென்று கட்சி கோருகின்றது.

### குடியேற்றத் திட்டம்

கடந்த காலங்களில் அரசினுல் கடைப்பிடிக்கப்பட்ட குடியேற்றக் கொள்கைகள் குடியேற்றத் திட்டங்களில் நிரந்தரமான பதட்ட நிலையை உருவாக்கி அதன்மூலம் இனக் கலவரங்கள் உருவாகும் சூழ் நிலையிலிருப்பதாலும் வட, கிழ் மாகாணங்களில் வாழும தமிழ்ப் பேசும் மக்களில் கணிசமான தொகையினர் நிலமற்றவர்களாக விருப்பதாலும் அதன் காரணமாக அரச காணிகளில் அத்துமீறிப் பிரவேசித்து வாழ்பவர்கள், தொழில் புரிபவர்கள் அரச அதிகாரிகளினதும் படைகளினதும் விரட்டல், தாக்குதல், பயமுறுத்தல் ஆகியவற்றிற்குள்ளாவதாலும் 1956, 1958, 1977 ஆகியவற்றில் இடம் பெற்ற இனக் கலவரங்கள் தமிழ் பேசும் மக்கள் வடக்கு, கிழக்குக்கு வெளியே நிரந்தரமாக வாழ்வது பாதுகாப்பற்றது என உறுதிப்படுத்தப்படுவதாலும் வட, கிழ் மாகாணங்களில் தமிழ்ப்பேசும் மக்களை மட்டுமே குடியேற்றவேண்டுமென்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச காணிகளில் அத்துமீறிக் குடியேறியுள்ள தமிழ்பேசும் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் மிரட்டல், பயமுறுத்தல், தாக்குதல் ஆதியன உடனடியாக நிறுத்தப்படுவதுடன் அவை அவர்களுக்கு உரிமையாக்கப்பட வேண்டுமென்றும் அக்கட்சி கோருகின்றது. (இ)

---

# 'யோகேஸ்' பிறந்தநாளில் சில நீங்காத நினைவுகள்

-- பற்றிமாகரன் --

யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர்விடுதலைக் கூட்டணியின் இளந்தலைவர்களில் ஒருவருமான திரு. வெ. யோகேஸ்வரன் இன்று தனது 47வது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றூர்.

இத்தினத்தில் அன்னூர் நலம் பல பெற்று நற்சேவை நவின்றிட வாழ்த்தும் அதேவேளையில் அவரைப் பற்றி நெஞ்சில் நிலைத்து நிற்கும் சில நினைவுகளை தொகுத்து தருகிறோம்.

காலை முதல் நடுநிசிவரை திரு. யோகேஸ்வரன் மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டு இயங்குவது அவரது ஒரு தனித்துவமான இயல்பு இதற்கு காரணம் தன்னை அண்டிவரும் மக்களுக்குஎவ்வகையிலேனும்உதவி புரிதல் வேண்டுமெனும் உளப்பாங்கே. சிலவேளைகளில் வருபவர்களுக்கு உதவிசெய்யமுடியாமல் போகுமிடங்களில் அவர்களுக்கு தன்னுல் அதனைச் செய்யமுடியாமல் போனதன் காரணத்தை அடிக்கடி சொல்ல துயரப் படுவதைக் கண்டுள்ளோம். ஆனுல் சரியான காரணத்தை புரியாதவர்கள் சில வேளைகளில் சூடான வார்த்தைகளைப் பிரயோகித்தாலும் கூட அதனைப் பொருட்படுத்தாது அவர்களுக்கு அடுத்தமுறை ஏதாவது உதவி செய்ய முடியுமானுல் உதவவேண்டும் எனும் உள உறுதி உடையவர் திரு. யோகேஸ்வரன்.

இவருடன் நண்பர்களாகப் பழகியவர்கள் என்றுமே அவரைவிட்டு பிரிந்ததில்லை அவ்வளவு தூரம் நட்பை மதிக்கும் நற்பண்புடையவர்.

அன்னூர் பாராளுமன்ற உறுப்பினராக வந்தபின்னர் 1977ம் ஆண்டு கலவர நேரமும் 1979ம் ஆண்டு அவசர கால வேளையிலும் அவர் இத்தகைய தொண்டன் என்பதை மக்களுக்கு தெளிவாக எடுத்துக்காட்டியதுடன் அதேபோல் அல்லும்பகலும் அவரது இல்லத்தில் குவியும் மக்கள் வெள்ளம் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களைவிட தனித்துவமான ஒருஇடத்தை மக்கள் அவருக்கு அளிக்கிறூர்கள் என்பதற்கு சான்றுக அமைகிறது:

கட்சி, சமயம், தொகுதி, இனம் முதலியவைக்கு அப்பாற்பட்ட முறையில் அவரும் அனைவர்க்கும் மனிதாபிமான அடிப்படையில் அரும்பணியாற்றித் தான்ஒரு தலைசிறந்த தலைவனென நிரூபித்துவருகின்றூர். இன்னுளில் அவரின் கொள்கைகளும் இலட்சியங்களும் நிறைவுபெற்று முழுத் தமிழ் உலகும் அவரது சேவையைபெற்று மகிழ்வுற வேண்டுமென்று இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

---

# "மக்கள் பிரச்னைகளை நேரில் அறிந்து தீர்வு காண்பதிலேயே நாம் அக்கறை கொண்டுள்ளோம்"

## யோகேந்திரா கூறுகிறுர்

(யாழ்ப்பாணம்)

"மக்களுடைய பிரச்னைகளை அவர்களின் இருப்பிடங்களுக்கு நேரேசென்று அறிந்து அவற்றைத்தீர்த்து வைப்பதில் யாழ் மாவட்ட அமைச்சு மிகவும் அக்கறை கொண்டுள்ளது. பிரச்னைகளை நேரே அறிந்து தீர்ப்பதனுல் தாமதமின்றி மக்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யவும் வழி பிறக்கின்றது. இதன் காரணமாகவே எங்கு வேறு பல கஷ்டங்கள் இருப்பினும் மக்களின் அழைப்பு ஏற்று வருகின்றோம்."

இவ்வாறு கொக்குவில் சாரதாமகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி கணேஸ்வரன் தலைமையில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி பேசுகையில் கூறினூர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"சமயப் பற்றும் தமிழ் உணர்வும் மிக்கவர்களாக நீங்கள் விளங்குகிறீர்கள். இலங்கை பெருமைப்படத்தக்க கல்விமான்களையும் இப்பகுதி தோற்றுவித்துள்ளது. இத்தகைய மரபை நீங்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

---

### யாழ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் பாடசாலை அதிபர்களுடாக கலாச்சாரமன்றச் செயலாளருக்கு பங்குனி மாதம் 15ம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (நா-கு)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் கட்சித்தாவல் தொடர்கிறது

## 1 அமைச்சர், 2 ராஜ்ய சபை உறுப்பினர்

### 2 எம். எ . ஏ.க்கள், நடிகர்அதிமுகவிலிருந்துராஜிஞமா

சென்னை, பெப். 4

இந்தியத்தேர்தல் முடிவுகளின் எதிரொலியாக தமிழ் நாட்டில் கட்சித்தாவல்கள் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டே வருகின்றன.

இந்திய ஆளும் இந்திரா காங்கிரஸ் உடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டிய திராவிட முன்னேற்றக்கழகத்திலேயே இப்போது பலர் சேர்த்து வருகின்றனர்.

தமிழ்நாடு ஆளும் அ. தி. மு. க. விலிருந்து இதுவரை ஒரு அமைச்சர், இரண்டு சட்ட சபை உறுப்பினர்கள், இரண்டு ராஜ்யசபை உறுப்பினர்கள் ஒரு நடிகர் ஆகியோர் வெளியேறியுள்ளனர்.

சட்டசபை உறுப்பினர்களான பி. ஆறுமுகம், எஸ். செல்வராஜ், ராஜ்யசபை உறுப்பினர்களான ஜனுப் நூர்ஹான் ரஸாக், திரு. சுப்பிரமணியம், நடிகர் ஆர். விஜய மார் ஆகியோரே இதுவரை அ தி. மு. க.விலிருந்து வில தி மு. க.வில் சேர்ந்தவர்களாவர்.

225 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு சட்டசபையில் இப்போது 48 தி. மு. க. உறுப்பினர்களும் 125 அ. தி. மு. க. உறுப்பினர்களும் உள்ளனர்.

இந்திய ராஜ்சபையில் இப்போது ஐந்து தி. மு. க. உறுப்பினர்களும் ஏழு அ. தி. மு. க. உறுப்பினர்களும் உள்ளனர். (இ)

## அணு ஆயுதப் போர் மூண்டால் அமெரிக்காவை ரஷ்யா தோற்கடிக்கும்

நியூயோர்க், பெப். 4

உலகில் அணுஆயுதப் போர் ஒன்று நடைபெறுமாளுல் அமெரிக்காவை ரஷ்யா தோற்கடித்துவிடும்.

இவ்வாறு ஜலவாயுக் குண்டைக் கண்டுபிடித்த விஞ்ஞானி பேராசிரியர் எட்வேர்ட் ரெல்லர் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதபலத்தைப் பொறுத்த வரையில் அமெரிக்காவைவிட ரஷ்யாவே முன்னணி வகிக்கின்றது என்றும் ஸ்ரெம்போஸ்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சி யாளரான பேராசிரியர் ரெல்லர் கூறினர். (இ)

## பாகிஸ்தானுக்கு உதவ வேண்டியது அமெரிக்காவின் கடமை

### 59 பாதுகாப்பு ஒப்பந்தம் பலப்படுத்தப்படும் என்றும் கூறுகிருர் பிரெஸென்ஸ்கி

இஸ்லாமாபாத், பெப். 4

பாகிஸ்தானின் சுதந்திரத்தையும் பந்தோபஸ்தையும் பேணிப்பாதுகாப்பது அமெரிக்காவின் கடமை. எனவே 59ம் ஆண்டு பாகிஸ்தான் அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் பலப்படுத்தப்படும்.'

இவ்வாறு அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டரின் பாதுகாப்பு ஆலோசகர் திரு. பிரெஸென்ஸ்கி இஸ்லாமாபாத்தில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும் இராணுவ உதவிகள் எதுவிதத்திலும் இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட மாட்டாது என்றும் திரு. பிரெஸென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் குறுக்கீடு சர்வதேச கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## சகல போட்டிகளிலும் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் சன்மார்க்க இயக்கம் நடத்திய சமய அறிவுப்போட்டிகளில் பறங்கித்தெரு மாணவ மாணவிகள் சகல போட்டிகளிலும் முதல் இடத்தைப் பெற்றுள்ளனர்.

யாழ். முஸ்லிம் சன்மார்க்க இயக்கத்தினர் சுமார் பதினைந்து வருடகாலமாக சமய அறிவுப் போட்டிகளை நடாத்தி இளம் முஸ்லிம் சிறுர்களை சமயத்துறையில் ஊக்குவித்தது போல இம்முறையும் போட்டிகளை நடாத்தி பரிசுகளை வழங்கினர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஐதுறூஸ் மகாம் பள்ளி பேஷ் இமாம் மௌலவி மீரான் முஹிதீன் பரிசில்களை வழங்கினர்.

வெற்றி பெற்ருேர் விபரம் வருமாறு அறபு எழுத்து பெண்கள் பிரிவு ஏ. ஸீ. மஹ்பூபா பறங்கித்தெரு மதரஸா எம். கே. இஸ்மியா பறங்கித்தெரு மத்ரஸா எம். ஏ. ஸி. மன்ஸிலா மன்பஉல் உலூம் மத்ரஸா.

அறபு எழுத்து ஆண்கள் பிரிவு:

ஏ. ஸீ. நவாஸ் பறங்கித்தெரு மத்ரஸா எம். எஸ். மஃஸூம் மன்பஉல் உலூம் மத்ரஸா ஏ. எப். புஆத்.

யாஸீன் மனனம் பெண்கள் பிரிவு:

எம். கே. ஜன்ஸியா பறங்கித்தெரு மத்ரஸா ஏ. ஸீ. ஜெஸ்மின் பறங்கித்தெரு மத்ரஸா எம். ஸீ. ஜுஹைரா மஸ்றஉத்தீன் மத்ரஸா.

யாஸீன் மனனம் ஆண்கள் பிரிவு:

ஏ. ஸீ. நவாஸ் பறங்கித்தெரு மத்ரஸா ஏ. எம். ஏ.

(7-ம் பக்கம் பார்க்க)

அமெ. பணயக் கைதிகளை

## விடுதலை செய்ய விரும்புகிருர் ஈரான் புதிய ஜனுதிபதி

தெஹ்ரான், பெப். 4

'அமெரிக்க பணயக் கைதிகளை விடுதலைசெய்வது குறித்து ஈரான் அரசுடன் பேச்சு நடத்தி சுமுக முடிவுகாண வேண்டியது அமெரிக்காவின் கடமை,'

இவ்வாறு ஈரான் ஜனுதிபதியாகப் பதவி ஏற்கஇருக்கும் ஜனுப் பாணி சதார் தெரிவித்துள்ளார்.

ஈரானிய ஷா தம்முடன் எடுத்துச் சென்ற சொத்துக்களை திருப்பிக்கொடுக்கவேண்டும்; ஷாவை ஈரானில் விசாரணைசெய்ய அனுமதிக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகளுக்கமைய பணயக் கைதிகளை விடுதலை செய்யவே தாம் விரும்புவதாகவும் ஜனுப் சதார் கூறினர்.

பணயக் கைதிகளுக்குப் பொறுப்பாகஉள்ள மாணவர்கள் தமது உத்தரவுக்கு பணிந்து நடப்பார்கள் எனத்தாம் நம்புவதாகவும் அவர் கூறினர். [இ]

### பக்தவத்சலம் இந்திரா காங்கிரசில் சேர்ந்தார்

சென்னை, பெப், 4

முன்னுள் தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அர்ஸ் காங் காங்கிரஸிலிருந்து ராஜிஞமாச் செய்து இந்திரா காங்கிரஸில் சேர்ந்து கொண்டார்.

அமெரிக்க உதவி

## இந்தியாவை ஆத்திரமூட்டக்கூடாது

### ஆஸி.வெளியுறவு அமைச்சர்கூறுகிருர்

கன்பரா, பெப். 4

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும் ஆயுத உதவி இந்தியாவுக்கு ஆத்திரமூட்டாத வகையில் இருக்கவேண்டும்.

இவ்வாறு ஆஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் திரு. பீக்கொக் தெரிவித்துள்ளார்.

ஆப்கான் நெருக்கடி குறித்து பேச்சு நடத்தும் பொருட்டு மலேஷியா, சிங்கப்பூர், இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு நாடு திரும்பிய பின்னரே திரு. பீக்கொக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்க உதவி இந்தியாவைப் பாதிக்காது என்று அமெரிக்கா இந்தியாவுக்கு உறுதி அளிக்கவேண்டும் என்றும் திரு. பீக்கொக் தெரிவித்தார். [ ]


# விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினுல் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி.

BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

Mel Ads

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம்!
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட ... உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ...00/- சன்மானம்!


# அமெரிக்க மக்கள்

## போரை விரும்புகின்றனர்

### அபிப்பிராய வாக்கெடுப்பு கூறுகிறது

வாஷிங்டன், பெப். 4

சோவியத் யூனியனுடன் அமெரிக்கா ராணுவ யுத்த நடவடிக்கையை மேற்கொள்ளவே அமெரிக்கர்கள் விரும்புகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பைக் கண்டித்துள்ள அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டரின் நடவடிக்கை குறித்து'வாஷிங்டன்போஸ்ட்' பத்திரிகை நடாத்திய அபிப்பிராய வாக்செடுப்பொன்றிலேயே அமெரிக்க மக்களின் இவ்விருப்பம் தெரியவந்துள்ளது.

சோவியத் யூனியனுக்கு எதிராக ராணுவ யுத்த நடவடிக்கையுடன் சகல நடவடிக்கையிலும் அமெரிக்கா ஈடுபடுவதையே இந்த வாக்கெடுப்பு வெளிப்படுத்தியுள்ளது. 52வீதமான மக்கள் யுத்தம் நடைபெறுவதை ஆதரித்துள்ளனர்,

மத்திய கிழக்கிலிருந்து எண்ணெயைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்த இந்நடவடிக்கை அவசியமாகின்றதென்று இந்த வாக்செடுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)

ஒலிம்பிக் பகிஷ்கரிப்பு

## ஆபிரிக்க பிரசாரத்தை தடுக்க பிரஷ்னேவ் முயற்சி

### முகம்மதலி குற்றம் சாட்டுகிருர்

வாஷிங்டன், பெப். 4

"மாஸ்கோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரிக்குமாறு ஆபிரிக்க நாடுகளின் ஆதரவைத் தேடி தாம் மேற்கொண்டிருக்கும் சுற்றுப் பயணத்தை ... செய்ய சோவியத் அதிபர் திரு. பிரஷ்னேவ் முயன்றுர்.

இவ்வாறு முன்னுள் அதிபாரக் குத்துச்சண்டை வீரர் முகம்மதுஅலி குற்றம்சாட்டியுள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கைக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா நடித்த
புகுந்த வீடு (புத்தம்புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்) தினசரி: 10-30, 4-45, 7-00, & 9-30 போன்: 7693
Zoltan Hound of Dracula

2nd Crowded Week
Shanthi JAFFNA Phone: 7642
Daily 5 Shows - 10-30, 2-30, 4 45, 7-00 & 9-30 p.m.
We are going to kill one passenger a minute until New York City pays us 1 million Dollars''
ROBERT SHAW... HECTOR ELIZONDA
"The Taking of Pelham One Two Three" Scope Color
Every one read it, Now you can Live it.
Action Packed! Suspense!! Thriller!!!

வெற்றிகரமான 4-வது ஜனத்திரள் வாரம்
ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
தேவதாஸ்
முன்னர் பார்த்து மீண்டும் பார்க்கத் துடிப்போரும் தவறவிட்டு ஏங்குவோரும் அடுத்துவந்த இளம் சந்ததியாரும் கண்டு களிக்க கிடைத்த கடைசி சந்தர்ப்பம் இதுவே.
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கட்டுகளுக்கு முந்துங்கள்.

SRIDHAR JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 1-30, 4-15, 7-00 and 9-45 p.m.
Burt Lancaster - Dean Martin in
AIR PORT
The Great Novel.........Now A Motion Picture
Coming Soon : FRAMED
BADGE 373

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
ஜெய்சங்கர் - ஜெய்சித்ரா
நாகேஷ், K. A. தங்கவேலு, S. A அசோகன்
பணக்காரப் பெண்
(புத்தம் புதிய கொப்பி)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா, தேங்காய் சீனிவாசன் நடிக்கும்
6-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
Graham Dorsey became a legend after his death.
The trouble was he was still alive.
THE MOST WANTED MEN IN THE WEST!
Charles Bronson and Jill Ireland
"FROM NOON TILL THREE"
The west will never be the Same again...but then neither will BRONSON. More Suited for adults.

மனோஹரா A யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
Daily 10-30, 4-45, 7-00 & 9-30
CITY OF DEATH

# விவசாயக் கடன் பெற முயற்சி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு இவ்வருடத்திற்கான விவசாயக் கடனை மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி திரு. தா. திருநாவுக்கரசு நடவடிக்கை மேற் கொண்டுள்ளார்.

பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை, பெரியவிளான் ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் 120 விவசாயிகள் தமக்கு இவ்வருடத்திற்கு விவசாயக் கடன் வழங்குமாறு பண்டத்தரிப்புப் ப. நோ. கூ. சங்கத்திற்கு ஊடாக விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களுக்கு விவசாயக் கடன்களை வழங்க மக்கள் வங்கி முன்வராததைத் தொடர்ந்து இப்பகுதி விவசாயிகள் இதுபற்றி வட்டு. எம். பி திரு. திருநாவுக்கரசுவிடம் புகார் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து வட்டு எம். பி இவ்விடயமாக மக்கள் வங்கிப் பிரதேசபொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டுள்ளார். (க)

# இன்றைய பலன்

தை மாதம் 22-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(5-2-1980)

மேடம்: கழுகுப் பார்வை வட்டமிடும். கடமையில்தடைகள் ஏற்படும். முடிந்தவரையில் செலவுகளைக் கட்டுப் படுத்தவும். உடற்சுகாதாரம் நன்று.

இடபம்: இறைவழிபாடு மேலிடும். இதயத்தில் அமைதியும் ஏற்படும். முதியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சிகரமான தினம்.

மிதுனம்: வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள். தொழிலிலும் நன்மாற்றங்கள் ஏற்படும். வெளியிடத்துச் செய்தியும் கிடைக்கலாம்.

கடகம்: புதிய திட்டத்தைக் கையாளுவீர்கள். காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள். சகோதர சுகமுண்டு.

சிங்கம்: எவ்விஷயத்திலும் ஆலோசித்து முடிவெடுக்கவும். உடல்நலமும் பாதிக்கப்படலாம். செய்தொழிலில் தடுமாற்றநிலை தென்படும்.

கன்னி: கடன்பட நேரிடலாம். தொழிலிலும் தொல்லையுண்டு. குடும்பத்திலும் சிறு பிணிக்கு இடமுண்டு. நாவடக்கம் நன்று.

துலாம்: முன்னேற்றப் பாதையுண்டு. முன்னேற வழியுமுண்டு. புதிய முதலீடுகளுக்கு உகந்த தினம்.

விருச்சிகம்: சிந்தையில் தடுமாற்றம். செய்தொழிலில் நஷ்டம். சிலருக்கு நூதன ரோகமும் தென்படலாம்.

தனுசு: வாகன விருத்தியுண்டு. வருமான மிகுதியுண்டு. ஆசிரியர்களுக்கு சிறப்பான தினம். குடும்ப நலமுண்டு.

மகரம்: மற்றவர்களுக்கு உதவுவதில் முந்நிற்பீர்கள். எதிர்பார்த்த பொருள் கைவந்துசேரும். காதல் வாழ்விலும் கனிவான தினம்.

கும்பம்: பகைமூட்டம் வட்டமிடும். உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். அன்னிய வாசமும் ஏற்படலாம்.

மீனம்: நீண்டநாள் பகை இன்று நிவர்த்தியாகும். தாம்பத்திய வாழ்விலும் ஒற்றுமை மலரும். சிநேகிதர் வழியாலும் நன்மை யுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
கருணாநிதியின்
அவன் பித்தனா?

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-மாலினி
பொன்சேகா
பைலட் பிரேம்நாத்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர்-அஞ்சலிதேவி
[illegible]

# "வன்செயலைத் தடுக்காவிடில் வீதியில் நடமாட முடியாது"

## ஏ. எஸ். பி. தென்னக்கோன் அச்சம்

(சங்கானை)

''நாட்டில் கொலை, களவு, வழிப்பறி போன்ற வன்செயல்கள் அதிகரித்துவருகின்றன. இவற்றை நாம் தடுத்துநிறுத்தாவிடில் சாதாரண மனிதனே வீதியில் நடமாடமுடியாத பயங்கரநிலை உருவாகிவிடும். இதனைத் தடுக்க வழி பொதுமக்கள், பொலீசார் நல்லுறவு பலப்படுத்துவதேயாகும்.''

இவ்வாறு காங்கேசன்துறை உதவிப் பொலீஸ்அதிபர் திரு. தென்னக்கோன் சங்கானை பொலீஸ் நிலையத்தில் பொதுமக்கள்- பொலீசார் நல்லுறவு பற்றிய கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர்தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:- ''கடந்த காலத்தில் நாட்டில் நிகழ்ந்த வன் செயல்களை உடனுக்குடன் கண்டுபிடிக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு குறைவாகவே இருந்தது. ஆனாலும் பல சிரமத்தின் மத்தியிலும் பொலீசார் தம்மால் ஆன முயற்சி எடுத்ததின் பலனாக ஓர் அளவிலான குற்றச் செயல்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

''உங்கள் உறவினர்க்கு இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்ந்திருந்தால் எவ்வளவு வேதனை அடைந்திருப்பீர்கள். எனவே குற்றச் செயல்கள் பற்றி நேரில் கண்டால் அல்லது அது பற்றித் தெரிந்திருந்தால் எந்த ஒரு அச்சமுமின்றி பொலிசாருக்குத்தகவல் கொடுக்க முன்வரவேண்டும். இத்தகவல் பற்றிய செய்தி எச்சந்தர்ப்பத்திலும் எக்காரணம் கொண்டும் வெளியிடப்படமாட்டாது''

சங்கானை பொலீஸ் எல்லைக்குள் மூன்று பிரிவு கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அவ்வப்பகுதிகளில் நிகழும் சிறு சிறு சச்சரவுகள், காணித் தகராறுகள் போன்றவை. இக்குழுக்கள் மூலமாகவே உடன் தீர்க்கப்படும்.

பொலீஸ் சார்ஜன்ட் திரு. கே. குலசிங்கம் தலைமையில் சங்கானை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, பெரியவிளான் சிறுவிளான், இளவாலை ஆகிய பகுதி உறுப்பினர்களும் சார்ஜன் டி. எம். குலரத்தின தலைமையில் சுழிபுரம், பனிப்புலம். சில்லாலை, மாதகல் பகுதி உறுப்பினர்களும் பொலீஸ் கான்ஸ்டபிள் திரு. செனவிரத்தின தலைமையில் வட்டுக்கோட்டை, தொல்புரம், மூளாய் அராலி ஆகிய கிராமங்களின் உறுப்பினர்களும் கருத்தரங்கில் பங்கு பற்றினர்.

சங்கானைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எம். எச். பி. பெர்னாண்டோவும் பேசினார். (கு)

......

## சகல...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எப் ஹஸன் யா கதீஜா கல்லூரி ஏ. எப். புஆத்.

மேற்படி போட்டிகளில் பறங்கித்தெரு மாணவ மாணவிகள் சகல போட்டிகளிலும் முதல் இடம் பெற்று மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளார்கள்.

இம்மதரஸா மாணவ மாணவிகளுக்குப் பயிற்சியளித்து சமயக்கல்வியை தொடர்ந்தும் கற்றுக்கொடுப்பவர்கள் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள தீனிய்யா மத்ரஸா மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

......

## ஒலிம்பிக்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவுதேடி அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டரின் விசேட தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள முகம்மதலி ஆபிரிக்க நாடுகளுக்கான தமது சுற்றுப்பயணத்தை இன்று ஆரம்பிக்கிறார். (கு)

## தொழிற்சங்க அமைப்பாளர் அமிர்தலிங்கத்திற்கு மேலும்பல பொறுப்புகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை முன்னாள் ஐ. தே. க. வேட்பாளரும், கட்சியின் பிரதம அமைப்பாளரும், ஐ. தே. க. தொழிற்சங்க சம்மேளன அமைப்பாளருமான திரு. ம. அமிர்தலிங்கம் கட்சியின் தொழிற்சங்க கருமபீடத்தால் யாழ். மாவட்டத்திலுள்ள இ. போ. ச, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனகூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்பளம், கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகிய ஸ்தாபனங்களின் தொழிற்சங்கப் பிரிவான ஜாதிக சேவக சங்கத்தின் (தேசிய தொழிலாளர் சங்கம்) யாழ். மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

......

## காணித்தகராறு: ஒருவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

காணித் தகராறினால் ஏற்பட்ட மோதலில் ஒருவர் பலத்த கத்திக்குத்துக்கு இலக்காகி அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி சிவன்கோவிலடியில் இடம்பெற்ற இம்மோதலில் தர்மலிங்கம் பாஸ்கரன் (20 வயது) என்ற இளைஞனே யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதசம்பந்தமாக கத்திக்குத்துக்குள்ளான பாஸ்கரன் யாழ். பொலிசில் செய்துள்ள புகாரில் ''அருளானந்தம் ஜெயக்குமார், முருகேசு நாகராசா (நாதன்) ஆகிய இருவரும் திருநெல்வேலி சிவன்கோவிலடியில் வைத்துத் தன்னைக் கத்தியால் குத்திப் படுகாயத்திற்குள்ளாக்கியதாகவும், தனக்கும் சந்தேக நபர்களுக்கும் காணித் தகராறு காரணமாக ஏற்கெனவேபகை இருந்துவந்ததாகவும்'' இதன் காரணமாக கத்தியால் குத்தியதாகவும் தெரிவித்துள்ளார். யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீற்றர் சிங்கோ இதுசம்பந்தமான விசாரணையை மேற்கொண்டுள்ளார். சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. (கொ-கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொரார்ஜியின் மகன் | காந்திலாலின் மனைவி | சரண்சிங்கின் மனைவி**

# இந்திய அரசு நிர்வாகத்தில் தலையிட்டனராம்

புதுடில்லி, பெப். 4

இந்திய முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் மகன் திரு. காந்திலால் தேசாய், அவரது மனைவி திருமதி பத்மாதேவி, திரு. சரண்சிங்கின் மனைவி திருமதி காயத்திரிதேவி ஆகியோர் பல ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என நீதிபதி திரு. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

திரு. காந்திலால் தேசாய், அவரது மனைவி மற்றும் திரு. சரண்சிங் ஆகியோரின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்துமாறு திரு. மொரார்ஜிதேசாயின் அரசு நீதிபதி திரு. வைத்திலிங்கத்தை நியமித்திருந்தது.

திரு. வைத்திலிங்கம் தமது விசாரணை அறிக்கையில் மேலும்தெரிவித்துள்ளதாவது:

திரு. காந்திலால் அரசியல் சாசனத்துக்குப் புறம்பான முறையில் செயல்பட்டு தமது செல்வாக்கை வளர்க்க அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்தினர்.

திருமதி காந்திலால் திரு. மொரார்ஜியின் மருமகள் என்ற ரீதியிலும், தமது கணவரின் விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி தமது வரிப்பாக்கிகளை குறைத்து மதிப்பிடுமாறு வருமானவரி அதிகாரிகளை நிர்ப்பந்தித்தார்.

திருமதி காயத்திரிதேவி சரண்சிங், தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி பணலாபம் தேடுவதற்காக நிர்வாகத்தில் குறுக்கிட்டார். [இ]

## யாழ்நகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ் வைபவத்தில் பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா, யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர், யாழ். மாநகர விசேட ஆணையாளர் திரு. க. சிவஞானம் உட்பட செயலக உயர் அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

தமிழ் மாணவிகள் தமிழில் தேசியகீதம் பாட, தேசியக் கொடியை அரச அதிபர் ஏற்றி வைத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட தொழிற்சங்க சம்மேளனத்தினர் பண்ணை அநாதைச் சிறுவர் இல்லத்திலுள்ள குழந்தைகளுக்கு நேற்றுக்காலை உணவுப் பொட்டலங்களை இலவசமாக வழங்கினர்.

இந்நிகழ்ச்சியின்போது அநாதைச் சிறுவர்களுடன் யாழ். அரச அதிபரும் ஒன்றாக இருந்து காலை உணவு அருந்தினார்.

யாழ். அரசினர் வைத்திய சாலையில் நடைபெற்ற மரம் நாட்டு விழாவை அரசஅதிபர் ஆரம்பித்து வைத்தார்.

நேற்றுமாலை துரையப்பா விளையாட்டரங்கில் உதைபந்தாட்டப் போட்டியொன்றும் நடைபெற்றது. (கெ)

## "போராட்டத்தின் மூலமே உரிமைகளைப் பெறலாம்!"

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரமண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடந்த வாழ்க்கைச்செலவு உயர்வு எதிர்ப்புக் கூட்டத்தில் இலங்கை [illegible] தமிழாசிரியர் சங்க செயலாளர் திரு. மகாசிவம் பேசுகையில் கூறியதாவது:

எமது உரிமைகளைப் பறித்தவர்கள் இடதுசாரிகளே. ஆனால் அவர்கள் இன்று எமக்கு ஆதரவுதர முன்வந்துள்ளனர்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இடதுசாரிகளால் தொழிலாளவர்க்கம் பாதிக்கப்பட்டுவந்தது. எந்த அரசு வந்தாலும் நாம் பாதிக்கப்பட்டுவருகிறோம். அதனால் தான் இடதுசாரிகளும் நாமும் ஒன்று சேர்ந்துள்ளோம். போராட்டம் மூலமே தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். அதற்கு தொழிலாளர் யாவரும் ஒன்றுபடவேண்டும்.

அரசாங்க லிகிதர்சேவை சங்க உதவிசெயலாளர் திரு. சந்திர பண்டாரா கூறியதாவது:

தொழிலாளர்களின் [illegible] 46 நாள் வேலையை 22 நாளாக குறைத்தபோது அதை எதிர்த்து துண்டுப்பிரசுரம் வெளியிட்டதற்காக எம்மவர்கள் கைதுசெய்யப்பட்டனர். சுதந்திரதினத்தன்று ஜனாதிபதிக்கு மரியாதைக்காக வெடிக்கப்படும் குண்டுகள் என்றோ ஒருநாள் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வெடிக்கத்தான் போகிறது.

சகலதொழிலாளர்களையும் ஒன்றுசேர்த்து கூட்டுத் தொழிற்சங்கமாக ஏன் ஒன்று சேர்த்திருக்கிறோம் என்றால் இன்றைய அரசின் சர்வாதிகாரத்திற்கு எதிரான ஒரு பரந்த போராட்டத்தை நடத்தவே நாம் ஒன்றுசேர்ந்துள்ளோம்.

இத் தொழிற்சங்கத்தின்கீழ் சகல அரசியல் கட்சிகளும் தத்தமக்குள் இருந்த சிறு பூசல்களை மறந்து ஒன்றுசேர்ந்துள்ளது. இத் தொழிற்சங்கம் மக்களிடமிருந்து பறித்த பங்கீட்டுப் புத்தகங்களை வழங்க வேண்டுமென கேட்கிறது.

இன்று வடபகுதி நசுக்கப்படுகின்றதென்றால் நாளை இதே நசுக்கல்வேலை தென் பகுதியிலும் நடைபெறும். அதனால் எங்கு யார் நசுக்கப்பட்டாலும் நாம் பார்த்துக் கொண்டிருக்கமாட்டோம்.

பல தமிழ் இளைஞர்கள் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். சிறையில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞனும் தென்னிலங்கையில் கைது செய்யப்பட்ட இளைஞர்களும் ஒன்றாகச் சிறையில் அடைக்கப்பட்டனர். அதனால் பாதிக்கப்பட்ட இருபகுதி மக்களும் அரசு செய்துவருகின்ற அநீதிகளை ஒருவர் மூலம் ஒருவர் அறியக்கூடியதாக இருந்தது. அதனால்தான் தென்னிலங்கையில் வாழுகின்ற பாதிக்கப்பட்ட மக்களும் வடபகுதியில் வாழ்கின்ற பாதிக்கப்பட்ட மக்களும் ஒன்றுகூடி அரசுக்கெதிரான ஒரு போராட்டத்தை நடாத்தக்கூடியதாக இருக்கிறது.

ஆசியாவிலேயே இலங்கையில்தான் இலவச பாடப் புத்தகம் வழங்கப்படுகிறது என அரசு கூறுகிறது. அதேவேளை லங்கையில் தான் தொழிலாளர் வர்க்கத்துக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது. அதனால் இங்குள்ள மூளைசாலிகளும் சடும் உழைப்பாளிகளும் மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்கின்றார்கள்.

தமிழ் மக்கள் மீது பூட்டப்பட்டுள்ள அடிமை விலங்கை உடைத்தெறியவும், தொழிலாளர்கள் எல்லோரும் ஒன்றுகூடி பாதிக்கப்பட்ட மக்கள் எல்லோருக்காகவும் போராடுவோமே. நாம் இன்று ஒன்றுகூடியுள்ளோம்.

அரசாங்க லிகிதர்சங்கப் பிரதிநிதி திரு. வி. நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

தொழிற்சங்கங்கள் போராட முடியாதசட்டங்களை இந்த அரசாங்கம் கொண்டுவந்துள்ளது. ஒன்றுபட்ட தொழிற்சங்கங்களின் [illegible] எதிர்ப்பினால்தான் நாம் வெற்றிபெறமுடியும்.

தென்னிலங்கையிலுள்ள தொழிற்சங்கங்கள் எல்லாம் இன்னும் ஒன்றுசேர்ந்துமுடியவில்லை. அதேவேளை வடபகுதியிலுள்ள சகல தொழிற்சங்கங்களும் கட்சிபேதம் மறந்து கொள்கை வித்தியாசங்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு ஒன்றுசேர்ந்துள்ளோம். எதிர்காலத்தில் எம்மைப்பொறுத்தவரை சாதி, மத, மொழி, பிரதேசம் ஆகியவற்றிற்கு அப்பால் நின்று போராடத்தயாராகிவிட்டோம் என்றார்.

எண்ணெயிலை உயர்வுக்கு அரசு பொறுப்பல்ல என்பதை எதிர்க்கட்சித் தலைவரே ஏற்றுள்ளதாக ஜனாதிபதி, அவரை இன்று பாராட்டியுள்ளார். இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சமுகமளித்துள்ளார். அவர் நிலைமையைத் தெளிவுபடுத்தவேண்டும். ஏனெனில் எதிர்க்கட்சித்தலைவரை அரசு தூண்டிவிட்டிருக்கிறதா என்று தொழிலாளர் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. (கொ)

# மா பற்றுக்குறை: என்ன காரணம்?

## உதவி ஆணையாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"மா விநியோகம் சீரான முறையில் நடைபெறாததினால் அடிக்கடி பற்றுக்குறை ஏற்படுகிறது. இதனை நீக்குவதற்கு ஒவ்வொரு சங்கமும் சங்க எல்லைக்குட்பட்ட பகுதியில், மா விற்பனவுசெய்யுமானால் பற்றுக்குறை ஏற்படுவதைத் தவிர்க்கமுடியும்"

இவ்வாறு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில், நடைபெற்ற, கூட்டுறவுக் கல்வித்திட்டத்தை பரவலாக்குவதற்காக நடாத்தப்பட்ட கருத்தரங்கில் யாழ் மாவட்ட [illegible] கூட்டுறவு அபிவிருத்தி [illegible] உதவிஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் கருத்துத்தெரிவிக்கையில் கூறினார்.

இக் கருத்தரங்கு கூட்டுறவு ஆணையாளர் திரு. ஈ. கே. திஸநாயக்காவின் பணிப்பின் பேரில் நடாத்தப்பட்டது. கருத்தரங்கில் யாழ் மாவட்டத்திலுள்ள சகல ப. நோ. கூ. சங்கங்களின் பிரதிநிதிகளும் கூட்டுறவு திணைக்களங்களின் உயர்அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

கருத்தரங்கில் நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கையில் ஒவ்வொரு சங்கமும் சங்க எல்லைக்குள் மட்டும் விற்பனை செய்ய முடியுமானால், எமது விற்பனவு பாதிப்படையலாம். இதனால் வெளியிலுள்ள தனியார் வியாபாரிகளுடனான தொடர்பு ஸ்தம்பிக்கலாம்" என்றார்.

"மா விற்பனையை சீராக வைத்திருப்பதற்கு சங்கங்கள் போதியளவு மாவை கையிருப்பில் வைத்திருக்குமானால் பற்றுக்குறை ஏற்பட இடமில்லை" என்றும் அவர் கூறினார்.

கருத்தரங்கில் பலரும் உரையாற்றினர். (கெ)

## யாருடையது?

[யாழ்ப்பாணம்]

யாழ் பஸ்நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கைக்கடிகாரம், யாழ். பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைக்கடிகாரத்தை தவறவிட்டவர், உடனடியாக யாழ் பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

உரியவர்கள் உடனடியாக வந்து அத்தாட்சிகாட்டி கைக்கடிகாரத்தைப் பெறத் தவறினால், கைக்கடிகாரம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படுமென்று கான்ஸ்டபிள் என். எஸ். இரத்தினசபாபதி தெரிவித்தார். [கெ]

## மக்கள்...

(-5ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து வளர்த்துவர வேண்டும்.

"இன்று சில பாடசாலைகளுக்குச் செல்லும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இளம்பருவமே எல்லா நல்ல குணங்களும் உருவாகின்ற காலமாகும். இளம்பிள்ளைகளின்முயற்சிகளையும், ஆற்றலையும் வளர்க்கின்ற பொறுப்பு இங்குள்ள கல்வி நிறுவனங்களுக்கே உரியனவாகும்.

"இப்பகுதிக் கல்விக் கூடங்களதும், மக்களதும் அடிப்படைத் தேவைகளை இன்று நாம் அறிந்துகொள்கின்றோம். இவற்றைப் பரிசீலனை செய்து உரிய அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து தீர்த்துவைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வோம்." (கொ-கு)

## 56 கைதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினத்தைக் கொண்டாடுமுகமாக தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. அவ் வைபவத்தில் சிறைச்சாலை அதிகாரிகளும் கைதிகளும் கலந்துகொண்டனர். (கொ)

## அனுமதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லம் (ஜூனியர்) சட்டத்தரணி எஸ். எம். அபுதயரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

காட்டு இலாகா உத்தியோகத்தர் திரு, எம். சத்தியன் வழக்கைநடத்தினார்.

விசாரணையின் பின் எதிரிகள் விடுதலைசெய்யப்பட்டனர்


## மரண அறிவித்தல்

### ஆசிரியமணி வி. ஆர். இரத்தினம்

உடுப்பிட்டி ஆசிரியமணி வி. ஆர். இரத்தினம் காலமானார். அன்னார்காலஞ்சென்றஅன்னசின்னப்பிள்ளையின் அன்புக்கணவரும், இளைப்பாறிய பாடசாலை அதிபர் ஆர். சிங்கரத்தினம், சட்டத்தரணி ஆர். ஆர். தர்மரத்தினம், சட்டத்தரணி ஆர். கோபாலரத்தினம், கணக்காளர் ஆர். விஜயரத்தினம் (சாம்பியா), ஆர். அழகரத்தினம் ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னாரின்பூதவுடல் இன்று (5-2-80) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு உடுப்பிட்டி சேமக்காலையில் அடக்கம் செய்வதற்காக அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

4875



## மரண அறிவித்தல்

### எம். ஏ. ஐயாத்துரை

கந்தர்மடத்தைச் சேர்ந்தவரும், பிரபல கன்னதிட்டி நகைத்தரகருமான எம்.ஏ. ஐயாத்துரை காலமானார். இவர் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஆர். யோகநாதனின் (தேர்தல் உதவி ஆணையாளர், மட்டக்களப்பு) தாய்மாமனாரும் எஸ். பத்மநாதனின் சிறிய தந்தையும், ஆர். கல்வளைராஜனின் (A.M.P) பெரியதந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு 41 பலாலிவீதி, கந்தர் மடத்திலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்துக்கு தனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். தயவுசெய்து இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

4887


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. QE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org